சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 5 | இதழ்: 06 | நவம்பர் - 2023 | விலை - ரூ.15/-

VOL:5 | ISSUE: 06 | NOVEMBER - 2023 | Rs. 15/-

அனைவருக்கும்
இனிய தீப ஒளி
திருநாள்
நல்வாழ்த்துக்கள்!



பக்தியின் சிகரம் கண்ணப்ப நாயனார்!

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-5 மலர்-06 நவம்பர் - 2023

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்

திருமதி. S.சாந்தி, சென்னை.

திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.

திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.

திரு. B.முருகன், சோழவந்தான்.

டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு
சிகரம் பப்ளிகேஷன்ஸ்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்

எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.
செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி



அன்பு குழந்தையே!

பல வேளைகளில் உனது நம்பிக்கை ஆட்டம் காணும் அளவுக்குப் பிரச்சனைகள் அதிகமாகும்போது வேறு எங்காவது போய் பார்க்கலாமா? என எண்ணத்தோன்றுகிறதா? இப்படி அடிக்கடி மனம் மாறுகிறாயா?

தன்னம்பிக்கை இழக்கிறாயா? அல்லது வருவது வரட்டும், நான் உன்னோடு இருக்கிறேன் என்று தைரியமாக இருக்கிறாயா? என்ன செய்யப்போகிறாய்?

அதை தைரியமாக அனுபவிக்க, நீ தயாராக இருந்து என் மேல் நம்பிக்கை கொண்டிருந்தால்,அதை அனுபவிக்கும் சக்தியை நான் கொடுக்கிறேன்.அது துன்பம் என்ற எண்ணம் ஏற்படாமல் நான் செய்கிறேன் உங்கள் குறைகளை நிவர்த்தி செய்து தரவே நான் பூமிக்கு வந்திருக்கிறேன்.

பாபா என்று அழைகிறாய். உனது கோரிக்கைகளை வினவுகிறாய். நானும் அடைத்து வைத்திருந்த வழிகளை திறந்து காட்டினேன். ஆனாலும் உன் மனம் அலைபாய்கிறதே ஏன்?

முதலில் உனக்கு கிடைத்ததை ஏற்றுக்கொள். அதில் உன்னை யாரென்று நிரூபித்துக்காட்டு. தலைவணங்கி செல்லக் கற்று கொள். எது நடந்தாலும் மற்றவர்கள் உன்னை கடிந்து கொண்டாலும் சிரம் தாழ்த்தி போ! அனைத்தும் தானாக உன் முன்னால் வந்து நிற்கும்.

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பகவான் சாயிநாதரின் அருளால் அறுபத்து நான்காவது இதழ் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளி யீட்டு விழா 8.10.23 ஞாயிற்றுக்கிழமை காலை10 மணிக்கு சாய் தியானாலயா ஆத்மஞான பீடத்தில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, அயனாவரம், சென்னை - 23) மிகச்சிறப்பாக நடைபெற்றது.

காலை 8 மணிக்கு ஆசிரியரின் சத்சங்கத்துடன் தொடங்கிய விழா தியானம், பஜனை எனத்தொடர்ந்தது. காலை பத்து மணிக்கு 111 வயது நிரம்பிய பகவான் சாயிநாதரின் அடியவர் திரு. சாய் தாயாரம்மா வரவும் புத்தக வெளியீட்டு விழா துவங்கியது.

இம்மாத புத்தகத்தை சாய் தாயாரம்மா அவர்கள் வெளியிட, பெரம்பூர் விவேகானந்தா பள்ளியின் கரஸ்பாண்டென்ட் திரு. சீனிவாசன் அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள்.

விழாவில், "பாராயணப்பகலவன்" திரு.சுந்தர் சாய்ராம்,"குரு அருள் வேண்டி" திரு.அசோக்குமார் சாய்ராம், "ஜனக்கல்யாண்" திரு.சுப்பிரமணியன், திரு. குமார், நியூ ஈரா கார்மெண்ட்ஸ் திரு.அகஸ்டின், அன்மார் சொல்லி யூசன் திரு.ராஜசேகர், குரோம்பேட்டை





பாக்ஸிங் சென்டர் திரு. அய்யாகண் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தார்கள்.

விழாவில் செல்வி. அமிர்தா, செல்வி. அட்சயா ஆகியோர் சாயி பஜன் பாடினார்கள். திரு.சாய் தாயாரம்மா, திரு.சீனிவாசன், திரு.சுந்தர் சாய்ராம், திரு.ஆசிரியர் ஆகியோர் பக்தர்களிடையே உரையாற்றினார்கள். விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் சாய் தியானாலயா சார்பில் அன்ன பிரசாதம் வழங்கப்பட்டது. சென்ற மாதம் நடுப்பக்கத்தில் நாம் வெளியிட்டிருந்த "சாய் தியானாலயா ஆத்மஞான பீடத்தின்" கொள்கைகளுக்கு வாசகர்களிடம் இருந்து ஏகோபித்த வரவேற்பு கிடைத்தது. ஆதரவளித்த அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள்!

எதைப்பிடித்தாலும் இறுக்கிப்பிடி என்ற சாய்பகவானின் வார்த்தைகளின் படி அமைக்கப்பட்டதே அந்த வாசகம். சாய் பக்தர்களாகிய







நாம் ஒவ்வொருவரும் மனதில் பதித்துக்கொள்ள வேண்டிய கொள்கை வாசகங்கள் அவை. மேலும் என் உண்மையான பக்தர்களுக்கு இரண்டு வழிகள் தென்படாது. அவர்களுக்கு தெரிந்ததெல்லாம் என் மார்க்கம் மட்டுமே! என்ற பாபாவின் சாஸனாம்ருதத் திருமொழியையும் நம் மனத்தில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

இக்கொடிய காலகட்டத்தில் சாயி மார்க்கம் மட்டுமே நம்மை நேர்வழியில் இட்டுச்செல்லும். நமது அத்யாவசிய மான தேவைகளைப் பூர்த்தி செய்யும். இறுதியில் ஞானத்தை கொடுத்து முக்தி நிலைக்கு இட்டுச்செல்லும். சாயி பக்தர்களுக்கும், நமது இதழின் சந்தாதாரர்களுக்கும், நமது இதழ் தொடர்ந்து வெளிவர ஒத்துழைப்புக் கொடுத்துக்கொண்டிருக்கும் அன்பர்களுக்கும், நண்பர்களுக்கும் "சாய் மகராஜ் குருவைதேடி" இதழின் சார்பாக"இனிய தீப ஒளித்திருநாள் வாழ்த்துக்களை" தெரிவித்துக் கொள்கிறோம்.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலக மாந்தர்கள் அனை வரும் போர், பகை, அச்சமின்றி ஆரோக்கியத்துடனும், மனநிம்மதி யுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கிறோம்.

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்! வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

- அன்புடன் ஆசிரியர்

ஓம் சாய்ராம்

வாழ்வை வளமாக்கும் இனிய சாயி லிகித ஜயம்

சாய் அன்பர்களுக்கு பணிவான வணக்கத்துடன்...

ப்ரபஞ்சத்தின் ஆற்றல்மிக்க சக்தி ஸ்வரூபனான நம் அன்பு சாய் மஹராஜ் க்ருபையினால் நமக்கு அளிக்கப்பட்ட திரு மந்த்ரமான,

"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்" என்ற

சக்தி வாய்ந்த லிகித நாம ஜபம் தினமும் 108 முறை யாவது மனம் ஒன்றி எழுதி நமது கர்ம வினைகளின் தாக்கத்தில் இருந்து, தற்காப்பு செய்து கொள்வதுடன், நமது அனைத்து காரியங்களிலும், பேரொளியாய் சாய்நாதர் வழி காட்டி, பரிபூரணமாய் நம்மை ஆசீர்வதிக்க ப்ரார்த்திப்போம் வாரீர்.



'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

தொடர் –64

குருவைத் தேடி

என்னிடம் இருந்த ஆறு ரூபாய்களையும் எஸ்.டி.டி பூத் விழுங்கிவிட்டது. மீதம் இருக்கும் ஒரு ரூபாயை எடுத்துக் கொண்டு பழையபடி நான் அமர்ந்திருந்த இடத்திற்கு வந்து அமர்ந்து கொண்டு மவுனமாக மக்களை வெறித்தபடி பார்த்துக்கொண்டே இருந்தேன். பத்து நிமிடம் கழித்து என்னை பிரசாதால யாவில் விட்டுச்சென்ற பைரவர் என் அருகில் வந்து அமர்ந்து கொண்டது.

அப்போது மணி மாலை 6. ஏறக்குறைய இரவு 11 மணிவரை நானும், பைரவரும் அதே இடத்தில் சிறிதும் நகராமல் உட்கார்ந்திருந்தோம். சமாதி மந்திர் அடைக்கப்பட்டு மக்கள் நடமாட்டம் ஓய்ந்து போனது. சரி தூங்கலாம் என்று அப்படியே படுத்துக்கொண்டேன் பைரவரும் எனக்கருகிலேயே படுத்துக் கொண்டது. ஆனால் வெகு நேரமாகியும் தூக்கம் வரவில்லை.

கடந்த பத்து வருடங்களாக என் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஞாபகம் வந்து கொண்டே இருந்தன. வியாபாரத்தின் மூலமாக ஏராளமாக பொருள் ஈட்டினாலும் சிறிதுகூட சேமித்து வைக்கும் எண்ணம் இல்லாமல் இருந்ததே எனது தோல்விக்கு காரணம் என்பதை நினைத்து மிகுந்த வேதனைக்குள்ளானேன்.



நான் நம்பிய நண்பர்கள் என்னை முதுகில் குத்தியதையும், பணத்தையே பெரிதென நினைத்து என்னிடம் உறவு கொண்டாடிய உறவுகளை நினைத்தும் நான் ஏன் ஆன்மீகத்தை விடுத்து லௌகீகத்திற்கு வந்தேன் என்றும் என்னை நானே நொந்து கொண்டேன்.

இறுதியாக எனது தோல்விக்கு நானே காரணம் என்ற முடிவிற்கு வந்து என்மீதே நான் தன்னிரக்கப்பட்டேன்.

நானே அனைத்தையும் இழந்து விட்டேன். நானே எனது தவறுகளுக்கு எல்லாம் காரணம். நானே அனைத்தையும் அழித்து விட்டேன். நானே என்னை நம்பியவர்களை கைவிட்டுவிட்டேன். என்னால்தான் அனைத்தும் என்றவாறே தூங்காமல் புலம்பித்தவித்தேன்.

சிறுவயதில் இருந்தே ஏராளமான ஆன்மீக தொடர்புகள் இருந்தும், எது என்னை ஆன்மீகத்தின்பால் செல்லவிடாமல் தடுத்தது என்று பலவாறாக சிந்தித்துக் கொண்டே படுத்திருந்தேன். நான் படுத்திருந்த இடம் சீரடி சாய்நாதரின் பாதம் பட்ட இடமல்லவா? ஒருவழியாக காலை 2 மணி இருக்கும். எனக்குள் தெளிவாக ஒரு குரல். நீ எதைச்செய்தாலும் "நான்" செய்கிறேன் என்று செய்கிறாய் அது தான் உன் தோல்விக்குக் காரணம். அது அகங்காரம் அல்லவா? என்றது.

அதை நான் நன்றாக உணர்ந்திருந்த காரணத்தினால், உடனே ஒத்துக் கொண்டேன். சரி அதுவே எனது தவறு என்றால் நான் திருத்திக்கொள்கிறேன். நாளை காலை பாபா எனக்கு தரிசனம் கொடுப்பாரா? என்று மனதிற்குள் நானே கேட்டுக்கொண்டேன். அதுவரை நான் செய்தேன், நான் செய்கிறேன் என்பதையே அகங்காரம் என்று நினைத்திருந்தேன். ஆனால் மறுநாள் எனக்கு வேறு மாதிரியான விளக்கம் அளித்தார் பகவான் சாயிநாதர்.

விடியக்காலை நான்கு மணிக்கெல்லாம் சமாதி மந்திர் விழித்துக்கொண்டது.பக்தர்கள்



சாரிசாரியாக வரத்தொடங்கிவிட்டனர். நான் எழுந்து போய் காலைக் கடன்களை முடித்து, குளித்துவிட்டு திரும்ப வந்தேன். பைரவர் அதே இடத்தில் படுத்திருந்தது. காலை மணி 6 இருக்கும். என் அருகில் ஒரு வயதான பெரியவர் வந்து அமர்ந்தார். பார்ப்பதற்கு வடநாட்டவர் போன்று இருந்ததால் நான் அமைதியாக இருந்துவிட்டேன்.

சிறிது நேரம் போயிருக்கும். பெரியவர் என்னைப்பார்த்து இராத்திரி எல்லாம் பேசிக்கிட்டே இருந்தியே! இப்ப பேச வேண்டிய துதானே! என்றார். எனக்கு என்ன சொல்வதென்று தெரியாமல் முழித்தேன். இவர் என்ன சொல்கிறார். நான் யாரிடமும் பேசவில்லையே! நானாகத்தான் புலம்பிக் கொண்டிருந்தேன். என்று

யோசித்தவாறே திடீரென்று நீங்க தமிழா என்றேன்.

அதற்கு அவர், நீ தமிழ் என்று நினைத்தால் நான் தமிழ்தான் என்றார். நான் சற்றுநேரம் அமைதியாக இருந்தேன். மீண்டும் பெரியவரே பேசினார். ஒன்றும் குழப்பம் வேண்டாம். நான் கேரளாவைச் சேர்ந்தவன். உன்னைப்பார்த்ததும் நம்ம நாட்டுப் பக்கத்தைச்சேர்ந்தவன் போல் இருந்ததால் பேசலாம் என்று வந்தேன். பிடிக்கவில்லை என்றால் நான் போகிறேன் என்றவாறே எழுந்து கொள்ள முயற்சித்தார்.

நான் உடனே இல்லை அய்யா, அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை. நீங்கள் உட்காருங்கள் என்றேன். நானும் கடந்த ஐந்து நாட்களாக யாரிடமாவது பேச மாட்டோமா என்றுதான் தவிக்கிறேன் என்றேன். ஆமாம் நானும் பார்த்துக்கொண்டு தானே இருந்தேன் என்றவர் சற்று சுதாரித்து, ம்.. நேற்றிரவு நீ புலம்பிக்கொண்டிருந்ததை நான் பார்த்துக்கொண்டுதானே இருந்தேன் என்றவர், ஆமாம் அப்படி என்னதான் புலம்பிக்கொண்டிருந்தாய் என்றார்.

அது பெரிய கதை அய்யா! சொன்னால் தீராது. என்கதை யைக்கேட்டால் உங்களுக்கே என்மீது கோபம் வரும். அதை விடுங்கள். எனக்கு பாபாவைப்பற்றி அதிகம் தெரியாது. உங்களுக்கு தெரிந்திருக்கும். எனக்கு பாபாவைப்பற்றி சொல்லுங் களேன். என்றேன். அதற்கு அவர், அப்படியானால் நீ உன்னப்பற்றி அறிய இங்கு வரவில்லை. பாபா யார் என்று அறிய வந்தாயா? என்றார்.

அப்படி இல்லை அய்யா! அதையும் தான் தேடிக்கொண்டிருக்கிறேன்.



இடையில் சில சறுக்கல்கள். மனம் குழம்பித்தவிக்கின்றது. நான் யார் என்று அறிந்திருந்தால் குழப்பம் வந்திருக்காதே! என்றேன். மிகவும் சரி! அப்படியானால் நான் யார் என்பதைக் கண்டுபிடி. அதைவிட்டு விட்டு பாபா யார் என்று கண்டுபிடித்து என்ன செய்யப் போகிறாய்? அது தெரிந்தால் நான் ஏன் புலம்பித்தவிக்கின்றேன். என்னால் முடியவில்லை அய்யா. நான் உடலா? ஆன்மாவா? இடையில் தவிக்கும் மனமா? எனக்குப் புரியவில்லையே என்றேன்.

தெளிவாக யோசிப்பதுபோல் பேசுகிறாய். பல நேரங்களில் நமது "தெளிவான அறிவே, உண்மையான அறிவை அறியவிடாமல் தடுத்து விடும்". உடல், அல்லது ஆன்மா இந்த இரண்டில் ஒன்றாகத்தான் நீ இருக்க

முடியும். அதுதானே உண்மை. சற்று இப்படி யோசித்துப்பார். நான் உடலா? ஆன்மாவா? என்று யோசிப்பதற்குப் பதில் நான் எதுவாக இருக்க முடியாது என்று யோசித்தால் உடனே விடை கிடைக்குமல்லவா?

உண்மைதான். நான் செத்துப் போகும் உடலாக இருக்க முடியாது. அழிவற்ற ஆன்மாவாகத்தான் இருக்க முடியும். நான் ஆன்மா தான். ஆனால் அதிலேயே என்னால் நிலைத்திருக்க முடியவில்லையே! அதற்கு காரணம் "நான்" என்ற அகங்காரம்தான். இந்த "நான்" உன் உடலைக்குறிக்கிறதா? இல்லை உன் ஆன்மாவைக் குறிக்கின்றதா? தயவு செய்து எனக்குப் புரியும்படி கூறுங்கள் அய்யா என்றேன் நான். இரவு நீ எதைக்குறித்து புலம்பிக் கொண்டிருந்தாய் என்றார் அவர்.

என் பெரும் செல்வத்தை இழந்து தவிப்பதற்கு "நானே" காரணம் என்று புலம்பிக்கொண்டிருந்தேன் அய்யா. அது அகங்காரமாக உனக்குத் தெரியவில்லையா? என்றார் பெரியவர். இது எப்படி அகங்காரம் ஆகும். விபரம் புரியாமல் எனது செல்வங்களை " நான்" இழந்துவிட்டேன் என்று தானே புலம்பினேன். என் தவறுக்கு நானே வருந்தினேன். அது சரிதானே! அது எப்படி அகங்காரமாகும்.

தம்பி நன்றாக யோசித்துப்பார். "நான்" இழந்தேன் என்றாலும் அதில் "நான்" வருகிறதல்லவா? இழந்தாலும் "நான்" இழந்தேன். பெற்றாலும் "நான்" பெற்றேன். எல்லாவற்றுக்கும் "நான்" என்றால் எனக்கு என்ன வேலை என்று பாபா கேட்க மாட்டாரா? நீ உன் ஆன்மாவை உணர வேண்டுமானால் முதலில் உன் குருவிடம் முழுமையாக சரணாகதி அடைய வேண்டும். நடப்பதெல்லாம் அவராலே என்ற நம்பிக்கை கொள்ள வேண்டும். நீ யார் என்ற உண்மையை அறிந்து கொள்ளும் நாள் வரும் வரை பொறுமையாக இருக்க வேண்டும்.

அதைவிட்டுவிட்டு எல்லாவற்றிலும் நான், நான் என்றால் அது உன் உடலைதான் குறிக்கின்றது என்பதை அறிந்து கொள். ஆனால் நீ " நான்" ஆன்மா என்கிறாய். நீ இந்த உலகத்தில் பெற்றதும், இழந்ததும், இந்த உடலை வைத்தே பெற்றாய், இந்த உடலை வைத்தே இழந்தாய், இப்பொழுது பிரட்சனை என்று வந்ததும் பொருப்பை தட்டிக்கழித்து பழியை ஆன்மாவின் மீது போடுகிறாய்.

உன் உடலின் மீதுள்ள மோகத்தால் அதற்காகத்தான் இத்தனையும் செய்தாய்! உடல் செய்த தவறுக்கு ஆன்மா எப்படி பொறுப்பேற்க முடியும். லௌகீக தேவைகளை அடைய உடல். ஆன்மீக தேவைகளை அடைய ஆன்மா. உடலையும் ஆன்மாவையும் பிரித்துப் பாக்காததினால் எதை, எது செய்கின்றது என்பதை அறிய முடியாமல் தவிக்கிறோம். ஆகவே முதலில் உடலையும் ஆன்மாவையும் பிரித்துப் பார்க்கக் கற்றுக்கொள்!

நீ பரிசுத்தமான ஆன்மா அது பரமான்மாவோடு சம்பந்தப்பட்டது. ஆன்மா தன்னை உணர்ந்து கொண்டு, தான் எங்கிருந்து வந்தோமோ அதே பரமான்மாவோடு மீண்டும் இணைவதற்காகவே சிறிது காலம் இந்த சதை பிண்டத்தில் வசிக்கின்றது. ஆனால் வந்த வேலையை மறந்து விட்டு தன்னை உடலாகவே நினைத்துக்கொண்டு அதன் மீது

பற்று கொண்டு அலைகின்றது. அதற்கு காரணம் "நான்" உடல் என்ற எண்ணமே!

அதற்காகவே உலகப்பொருட்களின் மீது பற்று கொண்டு அலைகின்றோம். "நான்" ஆன்மா என்று நீ உணர வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் புறப்பொருட்களின் மீதுள்ள பற்றை ஒழிக்க வேண்டும். பிறகு "நான்" சம்பாதித்தேன். "நான்" இழந்தேன் என்று அகங்காரம் எங்கிருந்து வரும். எல்லாம் அவன் செயல் என்ற பணிவு வந்தால் தான் அகங்காரத்தை அழிக்க முடியும்.

உன்னிடம் அகங்காரம் இருக்கும் வரை இறைவனை உனது வேலைக் காரனாகத்தான் பார்ப்பாய். நடக்கும் நிகழ்வுகளை நான் தான் செய்தேன் என்ற கர்வத்தோடுதான் செய்வாய். நீ என்பது இங்கு ஒன்றுமில்லை என்பதை உணர்ந்து கொள். அங்கிருந்து ஆட்டுகிறான். நீ ஆடுகிறாய். கயிறு ஆடுவது நின்றுவிட்டால் ஆட்டம் நின்றுவிடும். உடலால் செயல்படுவதை நிறுத்து! உள்ளத்தால் செயல்படு! ஏது நடந்திடினும் எனக்கேன் என்றிரு! என்று கூறியவர் என்னை கூர்ந்து பார்த்துவிட்டு சட்டென்று எழுந்து சென்றுவிட்டார்.

சிறிது நேரம் என்ன செய்வது என்று புரியாமல் அவர் நடந்து சென்ற திக்கையே பார்த்துக்கொண்டிருந்தேன் மூன்று நாட்களாகியும் சமாதி ஆலயத்திற்குள் சென்று பாபாவை தரிசிக்காமல் வெளியில் அமர்ந்திருக்கும் அகங்காரம் எனக்குப் புரிந்தது. உடனே அவ்விடத்தை விட்டு எழுந்து கொண்டேன். என் பையை தூக்கிக்கொண்டு சமாதி ஆலயத்திற்குள் நுழைந்தேன். பைரவரும் என்னுடனே வந்தார்.

– தொடரும்.

உலகமே குடும்பம்!



நமது அன்பிற்குரியவர்களை பிரிந்தால் வருந்துகிறோம்! நமது குடும்பத்தைப் பிரிந்து வெளி மாநிலத் திலோ,வெளி நாட்டிலோ பணிச்சூழல் கருதி பிரிந்திருந்தால் கவலைப்படுகிறோம்! நாம் ஒன்றை புரிந்துணர வேண்டும். எப்போதும் பிரிவு என்பதே நிரந்தரமானது! நமக்காக பகவான் பாபா அளித்த குடும்பம் என்பது தற்காலிகமானதே! இங்கே எதுவும் நிரந்தரமில்லை! உடனே இங்கே எதுவும் நிரந்தர மில்லை, நாம் பற்றற்றவர்கள் என பிறரை வெறுத்து ஒதுக்குவதல்ல ஆன்மீகம்! யாரும் நிரந்தரமில்லை என்று தெரிந்தும் எல்லோரிடமும் அன்போடிருப்பதே ஆன்மீகம்!

குடும்பம் நிரந்தரமில்லை என்று உணர்ந்தும் நமது கடமையை எதிர்ப்பார்ப்பின்றி அன்போடு செய்வதே கர்ம யோகம்! நமது குடும்பமே நமது உலகம் என்ற பொய்யான கற்பனையை கைவிட்டு, இந்த உலகமே நமது குடும்பம் என்ற பரந்த உணர்வுக்கு வருவதே பாபா வகுத்த ஆன்மீகம்!

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

சமர்த்த சத்குரு வீரடி சாய் மஹராஜின் க்ருபையாலும், கலியுக பரிபூரண தத்த அவதாரியான, ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அனுக்கிரகத்தினாலும், கலியுகத்தில் இருந்து மீண்டும் சத்ய யுகம் உருவாக ஸ்ரீ வல்லபர் மீண்டும் அவதாரம் செய்து, உயிர்கள் அனைத்திற்கும் நல்லருள் பொழிந்திட, சுவாமியின் நாம ஜபம் ஒன்றே முழுமையான பாதுகாப்பு கருவியாகும்.



"திகம்பரா திகம்பரா ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப திகம்பரா"

"திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ரதத்தாத்ரேயா திகம்பரா"

– எனும் சக்தி வாய்ந்த நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மாமந்திரத்தை தினமும் "108" முறையாவது ஜபம் செய்து, எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து தற்காப்பு பெற்றிடுவோம் வாருங்கள் நண்பர்களே!

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு: சுந்தர்சாய், 9789404451

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"



– ஜெயந்தி ஸ்ரீராம்

குரு அவர்கள் பக்தர்களுக்கு எவ்வாறு "சாயி தாயத்து" கொடுக்க ஆரம்பித்தார் என்பதை இம்மாதம் காண்போம். புத்தகமும், அன்னதானமும் ஆரம்பித்து ஒரு வருடம் முடிந்ததும் சற்றே பொருளாதாரப்பிரச்சனை தலை தூக்க ஆரம்பித்தது. குரு எவ்வளவு பிரச்சனை ஏற்பட்டாலும் யாரிடமும் உதவி கேட்டதில்லை. நிச்சயம் பாபாவே தனக்கு தேவையானதை செய்வார் என்ற நம்பிக்கையுடன், எவ்வளவு சிரமம் வந்தாலும் பல்லைக்கடித்துக்கொண்டு பொறுமையாக இருப்பார்.

ஒரு வியாழக்கிழமை அன்று பெரம்பூர் பகுதியில் அன்னதானம் விநியோகித்துக் கொண்டிருந்தபோது, ஒரு உணவு பொட்டலம் மட்டும் மிச்சம் இருந்திருக்கின்றது. அதை யாரிடம் கொடுக்கலாம் என்று யோசித்தபடி சிறிது தூரம் சென்றிருக்கிறார். அப்போது முரசொலி மாறன் பாலத்திற்கு அடியில் அமர்ந்திருந்த ஒரு பிச்சைக்காரரிடம் சென்று, அய்யா சாப்பிடுகின்றீர்களா என்று கேட்டிருக்கின்றார்.

அதற்கு அவரும் சரி என்று கூற, குரு மிச்சமிருந்த ஒரு பொட்டலத்தை அவரிடம் கொடுக்க, அவரோ அதை மரியாதையுடன் பெற்றுக்கொண்டு, குருவிற்கு வணக்கம் கூறிவிட்டு அவரைப் பார்த்து சிரித்திருக்கின்றார். அது ஒரு தெய்வீகச்சிரிப்பு என்று குரு அந்நிகழ்ச்சியைப் பற்றி நினைவு கூறுகின்றார்.

நான் அப்படிப்பட்ட ஒரு சிரிப்பை இதற்கு முன் யாரிடமும் பார்க்க வில்லை. அவர் என்னைப்பார்த்து சிரித்தவுடன் நான் என்னையறியாமல் அவரைப்பார்த்து கைகளைக் கூப்புகிறேன். அவர் என்னை ஆசீர்வதிப்பது போல் கைகளை மேலே உயர்த்துகிறார். அவருடைய சிரிப்பும், அவருடைய செய்கையும் அவர் ஓர் சாதாரண மனிதர் இல்லை என்பதை எனக்குச் சுட்டிக்காட்டின. அழுக்கான உடையணிந்திருந்த அவர் பரட்டை தலையுடனும், நீண்ட தாடியுடனும் காணப்பட்டார். அவரது கண்களில் தென்பட்ட ஒளி அவருக்குள்ளே


ஒளிந்திருக்கும் தெய்வீகத்தை வெளிப் படுத்தின. என்னை சில நிமிடங்கள் கூர்ந்து பார்த்துவிட்டு பின்பு கூறினார். நான் வருடத்திற்கு ஒருமுறை மட்டுமே உணவருந்துவேன். இது இவ்வருட உணவு.

இவ்வருட உணவை எமக்களித்த உமக்கு நான் ஏதாவது தரவேண்டுமே! என்றவாறு தனது கழுத்தில் தொங்கிக்கொண்டிருந்த அழுக்கான ஒரு தாயத்தை அறுத்து எடுத்து என்னிடம் கொடுத்தார். நான் அதைப் பெற்றுக்கொண்டு, சுவாமி, நான் தாயத்து உட்பட எதையும் அணியும் பழக்கமில்லாதவன். இதை நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டேன்.

நல்லது. தனக்கு கிடைக்கும் பொருள் அனைத்தும் தனக்கானதல்ல என்ற எண்ணம் இருப்பது மிகவும் சிறப்பு, உம்மை வாழ்த்துகிறோம். இதை யாமும் உனக்குக் கொடுக்கவில்லை. பிறருக்கு கொடுப்பதற்காகவே அளித்தோம். இதை மூன்று நாட்கள் மட்டும் உமது உடலில் அணிந்துகொள்.

இதைப்போன்ற தாயத்துக்களை உருவாக்குவது எப்படி என்று அதுவே உனக்குக் கற்றுத் தரும். சூட்சுமத்தை மிகச்சரியாகக் கற்றுக் கொண்டால், மூன்று நாட்களுக்குப் பின் உன்னிடமிருந்து இந்த தாயத்து மறைந்துவிடும். நீ உருவாக்கும் தாயத்துக்கள் நல்லவைகளுக்கே மட்டுமே பயன்படும். அந்த தாயத்துக் களை உருவாக்க உனது சற்குருவின் பிரசாதமான உதியையே பயன்படுத்து.

தாயத்துக்கள் உருவானவுடன் அதை 108 நாட்கள் உன்னுடைய தவத்தின் மூலம் உருவேற்றி பின்பு மக்களுக்கு வழங்கு. ஒரு போதும் இலவசமாக வழங்கிவிடாதே! ஒரு நியாயமான தொகையைப் பெற்றுக்கொண்டு கொடு. அந்த



தாயத்துக்கள் அவர்களது கோரிக்கையை நிறைவேற்றும்.அதன் மூலம் அன்னதான திட்டத்திற்கு உண்டான பொருளுதவியும் கிட்டும். உனது அன்னதானத்திற்கு தடை உண்டாகாது என்று கூற, நான் சரி அய்யா அப்படியே செய்கிறேன் என்று கூறி தாயத்தை பத்திரப்படுத்திக் கொண்டேன்.

அவர் கூறியதைப்போன்றே அன்றிலிருந்து மூன்றாவது நாளுக்குள் தாயத்தை உருவாக்குவதற்குண்டான பாடம் எனக்கு சூட்சுமவடிவில் வழங்கப்பட்டது. ஆனால் அதனிலும் ஒரு சூட்சுமம் என்னை வியக்க வைத்தது. ஆம் மூன்றாம் நாள் அதிகாலை நான்கு மணிக்கு நான் உறக்கத்தில் இருந்து விழிக்கின்றேன். என் தலையணையைச்சுற்றி ஏதோ ஒரு பொருள் சிதறிக்கிடக்கின்றது.

கண்களை விழித்துக்கொண்டு நன்றாகப் பார்க்கிறேன். அது தாயத்து தான். சிதறிக்கிடந்த தாயத்துக்களை ஒன்று சேர்த்துப் பார்க்கிறேன் மொத்தம் ஒன்பது தாயத்துக்கள் இருந்தது. இது

எப்படி சாத்தியம். நான் உறங்கும்போது நானே தாயத்துக்கள் செய்வது போன்று காட்சிகள் தெரிந்தது. ஆனால் அது கனவு போன்று தெரிகின்றது. அப்படியானால் இந்த தாயத்துக்கள் எங்கிருந்து வருகின்றன.

எல்லாம் பகவான் சாயிநாதரின் கருணை. தன் பெயரில் நிகழும் அன்னதானம் எக்காலத்திலும் நின்று விடக்கூடாது என்பதற்காக இப்படி ஒரு நாடகத்தை அரங்கேற்றி இருக்கின்றார். ஆனால் நான் அதுவரை தாயத்து போன்ற புறப்பொருட்களை நம்ப வேண்டாம் என்பதுபோல் அல்லவா பக்தர்களிடம் பேசி வந்திருக்கின்றேன். இப்போது எப்படி நானே அவர்களிடம் தாயத்தைப் பற்றி கூறுவேன். என்று என்னிடம் கூறி வருத்தப்பட்டார்.

நாம் அனுபவக்குறைவின் காரண மாக சிலபல "வித்தை"யை "அவித்தை" என்று கூறி மறுத்து விடுவோம். காலம் நமக்கு பல்வேறு அனுபவங்களைக் கொடுத்ததும் "அவித்தை" "வித்தை"யாக காட்சி யளிக்கும்போது தர்மசங்கடத்தில் நெளிவோம். அம்மாதிரி குரு அவர்கள் சற்று சங்கடத்தில் இருந்தார். நான் அவரை அதில் இருந்து மீட்கும் பொருட்டு, கவலைப்படாதீர்கள் இதுவரை நடந்த அதிசயங்கள் பாபாவி னால் தான் என்றால் இனிமேல் நடக்கப்போவதும் சாயிநாதரால்தான்.

ஆகவே பொறுமையாக இருப் போம். தாயத்தை உருவாக்க வைத்தவர். அதை வாங்குவதற்குண்டான நபரையும் உங்களை நோக்கி வரவைப்பார். என்றேன்.குருவும் அதுவும் சரிதான் என்று அதைப்பற்றிய நினைவை விட்டுவிட்டார். ஒன்பது தாயத்துக் களோடு தான் செய்த தாயத்துக்கள் ஒன்பதையும் சேர்த்து பதினெட்டு தாயத்துக்களை தினந்தோறும்



தவமிற்றும்போது உரு ஏற்றிக்கொண்டே இருந்தார்.

சரியாக 108 நாட்கள் முடிந்து 109 நாள் அதிகாலை குரு அவர்கள் கும்பகோணத்தில் அவர்களது குரு வின் பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்ள புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஆறு மணிக்கெல்லாம் குருவிற்கு ஒரு தொலைபேசி அழைப்பு. கோதை நாயகி (பெயர் மாற்றப்பட்டிருக் கின்றது) என்ற பெண்மணி தன்னை ஒரு சித்தா மருத்துவர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு பேசுகின்றார்.

தனக்கு தற்போது 85 வயது ஆகின்றது என்றும், கும்பகோணம் அருகே பாபநாசம் என்ற ஊரில் வசித்து வருவதாகவும், தான் ஒரு தீவிர புட்டபர்த்தி சாய்பாபாவின் பக்தை எனவும், இளம் வயதில் இருந்தே ஆன்மீகத்திலும், மருத்துவத்திலும் தீவிர ஆர்வம் இருந்ததால் திருமணம் செய்துகொள்ளவில்லை.

ஆகவே கடைசி காலத்தில் தனக்கு உதவியாக இருக்கட்டும் என்று தனது தங்கை பையனை தத்து எடுத்து

வளர்த்து வந்ததாகக் கூறினார். காலப்போக்கில், தத்து கொடுத்த தங்கையை பார்த்துக்கொள்ள ஆள் இல்லாததனால் அந்தப் பையனை திரும்ப கேட்கின்றார்கள் என்றும், தான் முடியாது என்று கூறிவிட்டதால் கோபப்பட்டு தனது உடன்பிறந்த தங்கையே மந்திரவாதியின் மூலம் தனக்கு செய்வினை வைத்து விட்ட தாகவும், அதனால் நான் உடலளவிலும், மனதளவிலும் பல பிரட்சனைகளை சந்திக்க வேண்டியுள்ளது என்றும் கூறினார்.

இதேபோல் இருபது வருடங்களுக்கு முன்பும் ஒரு முறை செய்தார்கள் என்றும், அப்போது புட்டபர்த்தி பாபா உயிரோடு இருந்ததினால் நான் அவரை நேரில் சந்தித்தேன். அப்போது சத்ய சாய்பாபா ஒரு தாயத்தை வரவழைத்து எனக்குக் கொடுத்தார். நான் அதை அணிந்து கொண்டேன். அதில் இருந்து எனக்கு ஏற்பட்ட தொந்தரவுகள் என்னைவிட்டு விலகின.

ஆனால் தற்போது மீண்டும் ஒரு வருடத்திற்கு முன் என் தத்துப் பையனை கேட்டு வந்தார்கள். அவனுக்கு இப்போது 60 வயதாகிறது. அவனுக்கும் என்னைவிட்டுப் போக இஷ்டமில்லை. ஆகவே அவனே தன் தாயிடம் உங்களுடன் வரமாட்டேன் என்று கூறிவிட்டான். என் சகோதரி என்னை சும்மா விடமாட்டேன் என்று சபதம் செய்து விட்டுப் போய்விட்டாள். போனவள் என்ன செய்தாளோ? தெரியவில்லை.

இருபது வருடங்களுக்கு முன்னால் எனக்கு ஏற்பட்ட தொந்தரவுகள் எல்லாம் இப்போது மீண்டும் நடக்கின்றன. எனக்கு ஆதரவளித்து காத்து வந்த பகவான் புட்டபர்த்தியாரை விட்டால் எனக்குவேறு கதியில்லை.



அதனால் சென்ற வியாழன் அன்று அவரை நினைத்து தியானம் செய்தேன்.

தியானத்தில் பாபா எனக்கு ஒரு நம்பரை காட்டி இந்த நம்பரில் தீர்வு இருக்கிறது என்று கூறினார். தியானத்தில் இருந்து எழுந்த நான் அந்த நம்பரை எழுதிப்பார்த்தேன். அது ஒரு தொலைபேசி எண்ணைப்போல் இருந்தது. அந்த எண்ணிற்குத்தான் இப்போது தொடர்பு கொண்டேன்.

பகவான் சத்யசாய் பாபா எனக்கு அளித்த அந்த எண்ணிற்குண்டான தாங்கள் யார் அய்யா! எனது பிரட்சனைக்கு உங்களிடம்தான் தீர்வு இருக்கின்றது என்று சாய் கூறினாரே! எனக்கு என்ன தர விரும்புகின்றீர்கள் அய்யா என்று அந்த வயதானப் பெண் கேட்கவும் குரு சட்டென்று "நானும் தாயத்துதான் தரப்போகிறேன்" என்று கூறினார்.

குரு அந்த வயதான பெண்ணுக்கு எப்படி தாயத்து கொடுத்தார்?அவர்கள் அந்த பிரச்சனையில் இருந்து விடுபட்டார்களா? சத்யசாய் பாபாவின் வாக்கு எப்படி பலித்தது என்பதை அடுத்த மாதம் எழுதுகிறேன்.

– தொடரும்

இலங்கை சாயிநாத சரணாலயம் பயணக்கட்டுரை



நமது சாய்மகராஜ் குருவைத்தேடி வாசக அன்பர்களுக்கு சுந்தர் சாயி வணக்கத்துடன், "சுடச் சுட இலங்கை பயணம் பற்றிய செய்திகளைப் பகிர்வதில் மிக்க மகிழ்ச்சி. கொழும்பு, கொட்டாஞ்சேனை சாயிநாதன் சரணாலயத்தில் 14.10.23 அன்று ஸ்ரீ பாதஸ்ரீவல்லபர் பாதுகை அபிஷேக பூஜை வைபவத்திற்கு வர இறைவனின் கட்டளை வந்திட அடியேனும், சாய் அன்பர் திரு. நாராயணன் அவர்களும் சென்ற வியாழன் நள்ளிரவு ஸ்ரீ பாதர் பாதுகையுடன் இலங்கைக்கு பயணப்பட்டோம்.

நள்ளிரவு 2.30 மணிக்கு இலங்கை சென்றடைந்து, விமான நிலைய வாசலை அடைந்து நமக்காக அனுப்பப்பட்டுள்ள காரோட்டியை அழைக்க நமது கைபேசியில் தொடர்பு கொண்டோம். ஆனால் அவருடைய தொலைபேசிக்கு தொடர்பு கிடைக்காத நிலையில் செய்வதறியாது நின்றோம். அப்போது, திடீரென்று எங்களை நோக்கி ஒரு அன்பர் வந்து 'ஹிந்தியில் டாக்ஸி வேண்டுமா' என கேட்டார்.

எனது முகத்தில் ஏற்பட்ட பாவனையைப் பார்த்து 'உங்களுக்கு ஹிந்தி தெரியாதா?' எனக் கேட்க, நான் சுதாரித்துக் கொண்டு ஹிந்தியிலேயே, எங்களது நிலையைத் தெரிவித்தேன்.

உடனே எங்களிடம் ஓட்டுனரின் கைப்பேசி எண்ணை வாங்கி அவரே அவரது தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண்டு நாங்களிருக்கும் இடத்திற்கு? (ஸ்ரீ பாதர் பாதுகை இருக்கும் இடத்திற்கு) அவரை வரவழைத்த அற்புதத்தை எண்ணி நாங்கள் வியந்தோம்.

அற்புதமான அமைதியுடன் அதிகாலை நேர இலங்கையின் அழகை ரசித்துக் கொண்டே எங்களது இருப்பிடம் வந்து, சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டு, வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு புறப்பட்டு கொழும்பிலிருந்து 60 கி.மீட்டர் தொலைவில் உள்ள அவிசாவிளை என்ற இடத்திற்குச் சென்றோம்.

அங்கு விசாலமான ரப்பர் தோட்டத்தினுள் உருவாகிக் கொண்டிருக்கும் ஸ்ரீ சீரடி சாய்பாபா ஆலயத்தில் "ஸ்ரீ பாத ஸ்ரீவல்லபர் பாதுகா அபிஷேக பூஜை" செய்து கூடிய விரைவில் மஹா கும்பாபிஷேகம் நடக்கப் பிரார்த்தனை செய்து கொண்டோம். அறங்காவலர் ஸ்ரீ,வீரபாகு அய்யா மற்றும் ஸ்ரீமதி. டாக்டர் மருதினி தெய்வநாயகம் மற்றும் ஆலயத்தின் சேவகர்கள் அனைவருடன் உணவருந்தி பிரியா விடைபெற்றோம்.

மறுநாள் சனிக்கிழமை, மஹாளய அமாவாசையன்று, மிகவும் விமர்ச்சையாக கொட்டாஞ்சேனை சாயிநாதன் சரணாலயத்தில் சாயி பக்தர்கள் உற்சாகத்துடன் கலந்து கொள்ள ஸ்ரீ பாதஸ்ரீ வல்லபர் அபிஷேக பூஜை மற்றும் சித்த மங்கள ஸ்தோத்ர பாராணயம் மிக விமரிசையாக நடைபெற்றது.

அறங்காவலர்கள் திரு.தெய்வநாயகம், திருமதி. மருதினி, திரு.ராகுலன், திரு.வீரபாகு ஆகியோர் பங்கேற்க நமது சாய் அன்பர் திரு. நாராயணனின் அபிஷேக ஆராதனைகளுடன், உற்சாகமான ஆனந்தத்துடன் சாயிநாதருக்கு மங்கள ஆரத்தியுடன்



அன்றைய நிகழ்ச்சி நிறைவடைந்தது.

15.10.2023, ஞாயிறன்று, ஷீரடி சாய் மகராஜ் மஹாசமாதி அடைந்த நாளன்று, கடந்த ஐந்து வருடங்களாக அந்த நன்னாளில் "வாக் வித் சாய்" என்று ஒரு ஆரோக்கியமான 10 கி.மீ ஆன்மீக நடைப்பயணம் நடைபெற்றது.

பக்தர்கள் படைசூழ பம்பளப்பட்டி வஜ்ர விநாயகர் கோவிலிருந்து கிளம்பி கொழும்பு மாநகரின் முக்கியமான வீதி கள் வழியாக ஒருவித



ஒழுங்கு கட்டுப்பாடுடனும், எந்தவித இடையூறுமின்றி பாடல்கள், பஜனை மற்றும் நாமகோஷத்துடன் உற்சாகம் பொங்கி வழிந்திட சாயிநாதர் அபிஷேக மூர்த்தி ஊர்வலத்துடன் கம்பீரமாக சரணாலயம் அமைந் திருக்கும் ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயத்தை வந்தடைந்தது.

இரண்டு நாட்களாக கடுமை காட்டிய வெயில், சாய்மகராஜ் ஆசிர்வாதத்துடன் அன்று காலை 6 மணி முதல் மதியம் 12 மணி வரை கருணை மழையாய் வெளுத்து வாங்கி எல்லோரது அகமும் புறமும் குளிர சாய் என்றாலே அற்புதம், ஆச்சரியம் என்பதற்கான பிரமாணமாக விளங்கியது. மதிய ஆரத்தியில் பக்தர்கள் பங்கு கொண்டு ஆரத்தி செய்து அன்னதானப் பிரசாதம் உட்கொண்டு மிக்க மகிழ்ச்சியுடன் அனைவரும் எங்களிடம் விடைபெற்றுக் கொண்டனர்.

அறங்காவலர்கள், பக்தர்கள் என அனைவரும் எங்களிடம் பிரிவோடும், அன்போடும் நடந்து கொண்டது எங்களை உற்சாகப்படுத்தியது. அவிசாவிளை ஸ்ரீ சீரடி சாயி நாதரின் கோவில் வேலையை துரிதப்படுத்தி கூடிய விரைவில் மஹா குடமுழுக்குப் பெருவிழா நடந்திட நாமனைவரும் சேர்ந்து பிரார்த்தனை செய்வோம் வாரீர் நண்பர்களே!

குரு வாழ்க!
குருவே துணை!

உண்மையான சாயி பக்தர்கள்!

உழைக்கிறேன் சரியான ஊதியம் கிடைக்கவில்லை என்று ஏங்குவதும், சுவற்றில் முட்டாத குறையாக வழிபாடு செய்கிறேன், ஆனால் பகவான் பாபா தரிசனமே தரவில்லை என்று ஏங்குவதும் ஒன்றே! பாபா நமக்கு என்ன செய்ய வேண்டும்? என்று கருதாமல், நாம் பாபாவுக்காக என்ன செய்ய வேண்டும்? என்று கருதுபவர்களே உண்மையான சாயி பக்தர்கள்!

பாபாவின் தரிசனம் முக்கியம் அல்ல, நமது அக மாற்றமே முக்கியம்! நமது அகம் மாற்றமடையாமல் பாபா ஒருவேளை நமக்கு தரிசனம் தந்துவிட்டால், மீண்டும் மீண்டும் தரிசனம் வேண்டும் என்று மனம் ஏங்கவே செய்யும்! அந்த ஏக்கப் பெருமூச்சில் ஆன்ம ஜோதியே அணைந்துவிடும்! கொஞ்சம் கூட பக்குவமே இல்லாமல் இருந்தால் நாம் பாபாவின் பக்தன் என்று கூறிக் கொள்வது எந்தவகையில் நியாயம்?

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
98434 40806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

பாகற்காய்
சில இனிப்பான செய்திகள்

வேம்பு போன்று கசப்பான சுவையுள்ள காய்கறி, பாகற்காய். அமெரிக்காவின் வெப்பமண்டலப் பிரதேசத்தில் தோன்றிய மிக முக்கிய மான இரு காய்கறிகளுள் பாகற்காயும் ஒன்றாகும். (இன்னொன்று, பறங்கிக்காய்) பாகற்காயின் தாவர விஞ்ஞானப் பெயர் மோனோர்டிகா சாரண்டிகா என்பதாகும்.

அமெரிக்காவைக் கொலம்பஸ் கண்டுபிடிப்பதற்கு முன்பே அட்லாண்டிக் பெருங்கடல் பகுதி அருகே பாகற்காய் நன்கு விளைந்தது. அங்கிருந்து இங்கிலாந்து மற்றும் பிரான்சு ஆகிய நாடுகளுக்கு அதன் விதைகள் எடுத்துச் செல்லப்பட்டன. தற்போது இந்தியா, ஸ்ரீலங்கா, இந்தோனேஷியா, மலேசியா, சீனா ஆகிய நாடுகளிலும் பாகற்காய் நன்கு பயிராகிறது.

மிகச்சிறந்த மருத்துவகுணங்கள் நிரம்பிய காய்கறி இது. நஞ்சை முறிக்கும் குடிமயக்கத்தை நீக்கும். காய்ச்சலைத் தணிக்கும். வயிற்றுக் கோளாறுகளைக் குணப்படுத்தும். பசிச் சுவையை உண்டுபண்ணும். பித்தத்தைப் போக்கும். மலச்சிக்கலையும் போக்கும் அரிய உணவு மருந்து பாகற்காய் ஆகும்.

இவ்வளவு சிறப்புகளை உடைய பாகற்காயை நீரிழிவு நோயாளி களைத் தவிர மற்றவர்கள் விரும்பி உண்ணுவதில்லை. காரணம், பாகற்கா யில் உள்ள கசப்புச் சுவைதான்! ஆனால் இக்காயின் அருமையை



இரு பதாம் நூற்றாண்டில் மக்கள் நன்கு உணர்ந்துவிட்டார்கள். அதன் விளைவாக ஆசியாவிலும், ஆப்பிரிக் காவிலும் பாகற்காய் சமையலில் அதிகம் இடம்பெற ஆரம்பித்துள்ளது.

பிரிட்டன் நாட்டு டாக்டர்கள், பாகற்காயில் இன்சுலின் போன்ற ஒரு முக்கியமான பொருள் இருக்கிறது. அதுதான் நீரிழிவுக்காரர்களின் இரத்தத் திலும், சிறுநீரிலும் உள்ள சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்துகிறது என்று 1993 ஆம் ஆண்டு கண்டுபிடித்தனர். ஆசியா மற்றும் ஆப்பிரிக்கக் கண்ட இயற்கை மருத்துவச் சிகிச்சையில் பல்லாண்டுகளாகப் பாகற்காய் உணவு மருந்தாகவே பயன்படுத்தப்பட்டு வருவதற்கு இதுதான் முக்கியகாரணம் என்றும் மேற்படி பிரிட்டன் ஆய்வு உறுதி செய்துள்ளது.

நீரிழிவு நோயாளிகளுக்கு மட்டுமல்ல, தொற்றுநோய் பரவாமல் நோய் எதிர்ப்புச் சக்தியுடன் ஆரோக்கி யமாய் வாழ விரும்பும் அனைவருக்கும் தேவையான சத்துணவும் பாகற்காயில் உள்ளது. எனவே, காலையில் காபி, தேநீர் முதலிய பானங்களுக்குப் பதிலாக

5, 6 பழுத்த பாகற்காய்களை சூஸாகத் தயாரித்து நீரிழிவு நோயாளிகள் அருந்தினால் அடிக்கடி பசி எடுக்காது. மற்றவர்களுக்கும் இதே நன்மை கிட்டும்.

100 கிராம் பாகற்காயில் வைட்டமின் 'ஏ' வைட்டமின் 'பி1, 'பி2 வைட்டமின் 'சி'8 மில்லிகிராம், இரும்புச் சத்து, 2 மில்லிகிராம் மற்றும் பாஸ்பரஸ், கால்சியம் போன்ற தாது உப்புகளும் போதுமான அளவில் உள்ளன. எனவே, உயர் இரத்த அழுத்தம், நரம்புக் கோளாறுகள், மாவுச்சத்துக் குறைபாடுகள், கண் தொடர்பான நோய்கள் முதலியவை இருந்தால் அவை குணமாகவும், அல்லது மேற்கண்ட கோளாறுகள் வந்துவிடாமல் முன்கூட்டியே தடுக்கவும், காலையில் பாகற்காய் சூஸ்சை வெறும் வயிற்றில் அருந்தி வந்தால் போதும். நல்ல பலன் கிட்டும்.

பாகற்காயைச் சமைத்துச் சாப்பிட்டாலும் சூஸாக அருந்தினாலும் மூலத்தொந்தரவு குணமாகிறது. இரத்தம் சுத்தப்படுத்தப்படுகிறது. இரும்புச்சத்தால் இரத்த விருத்தியும் ஏற்படும். சிறுநீர் கழிக்கும் போது ஏற்படும் எரிச்சலும் குணமாகிறது.

மூலத்தொந்தரவு உள்ளவர்கள் பாகற் கொடியின் இலைகளைப் பறித்து, மூன்று தேக்கரண்டி அளவு சாறாகத் தயாரித்து, அதை மோருடன் கலந்து காலையில் அருந்த வேண்டும். இந்தச் சிகிச்சை முறையை ஒருமாதம் தொடர்ந்தால் மூலநோய் கட்டுப்படும்.

சொறி, சிரங்கு, நமட்டு எரிச்சல், படர்தாமரை, தொழுநோய் போன்ற வற்றை வேருடன் அழித்துக் குணப்



படுத்தும் அரிய மருந்து பாகற்காய்! மேற்கண்ட நோய்கள் குணமாக ஒரு கப் பாகற்காய்ச் சாற்றுடன் ஒரு தேக்கரண்டி எலுமிச்சை இரசத்தைக் கலந்து, சூடான காபியை ஒவ்வொரு மடக்காக சாப்பிடுவது போல சாப் பிட வேண்டும்.

ஆறுமாதம் வரை தினமும் அதிகாலையில் இந்த முறை யில் சாப்பிடும் பாகற்காய்ச் சாறு, இரத்தம் தொடர்பாக தோலில் ஏற்படும் அனைத்து நோய்களையும் குணப்படுத்திவிடும். மேனி எழிலுக்கு ஏற்றது பாகற்காய் என்பதை மற்றவர்க ளுக்கும் உங்களைச் சொல்ல வைக்கும்.

சாதாரணமாகச் சமைத்துச் சாப்பிட்டாலும் மேற்கண்ட அனைத்து நோய்களும் குணமாகி ஆரோக்கிய விருத்தியைப் பெற முடியும். சமைத்துச் சாப்பிடும் பாகற்காய் தொண்டை வலி, மூக்கில் ஏற்படும் கோளாறுகள் ஆகியவற்றையும் குணப்படுத்துகிறது. பசலைக்கீரையை போல பாகல் இலையையும் சமைத்துச் சாப்பிட்டு குறைந்த செலவில் உடலுக்கு அதிக நன்மைகளைப் பெறலாம்.

வாழ்க வளமுடன்!
வாழ்க வையகம்!

சாய் மகராஜ் குருவை தேடி

E.mail : srirambaba1971@gmail.com

வள்ளலாரின் தனிச் சிறப்புகள்!

வள்ளலார் மற்ற ஞானிகளின் கொள்கை வரிசையில் மிகவும் வேறுபட்டவர். அவருக்கென்று உள்ள தனிச்சிறப்புகளை இக்கட்டுரையில் காணலாம் வாருங்கள். பளிச்சிடும் வெள்ளாடை மட்டுமே உடுத்துபவர். காவி ஆடை உடுத்த மாட்டார். உடம்பில் எந்த மணி மாலைகளையும் அணிய மாட்டார். ஆற்காட்டில் தயாராகும் ஆற்காடு காலணிகளை அணிந்து கொள்வார்.

கைகளை வீசி நடக்காமல் கைகளைக் கட்டியே நடப்பார்.கைகளில் திருஓடு வைத்துக் கொள்ள மாட்டார். சாப்பாடு வேண்டும் என்று எவரிடமும் கேட்கமாட்டார். கைகளில் மணிவைத்து உருட்ட மாட்டார். சிம்மாதனத்தில் அமரமாட்டார். ஆடம்பர வீட்டில் தங்க மாட்டார். தனக்கென ஆசிரம்ம் அமைத்து கொள்ளமாட்டார்.

அதிகமாக உணவு உட்கொள்ள மாட்டார். உயர்ந்த திண்ணையில் உட்கார மாட்டார். கைநீட்டி பேச மாட்டார். எவருக்கும் ஆசிர்வாதம் செய்ய மாட்டார். எவரையும் காலில் விழந்து வணங்க ஒப்புக் கொள்ள மாட்டார். தீட்சை என்பன போன்ற காரியங்களை செய்ய மாட்டார். சத்தம் போட்டு பேசமாட்டார். ஒருபோதும் சண்டை தகராறு வாதங்கள் செய்ய மாட்டார். ஆச்சார சங்கறப விகற்பங்களை செய்ய மாட்டார். உயிர்கொலை செய்வதற்கு ஆதரவு தரவே மாட்டார்.



புலால் உண்பதை ஏற்றுக் கொள்ளவே மாட்டார். மூட நம்பிக்கையை ஏற்றுக் கொள்ள மாட்டார். பணத்தை கையிலே தொடவே மாட்டார். தனக்கென்று எதையும் வைத்துக் கொள்ளமாட்டார். உண்மையை மட்டுமே பேசுவார்.எழுதுவார். எல்லா உயிர்களையும் தம் உயிர்போல் எண்ணி எந்த உயிர்களுக்கும் தீங்கு செய்யாமல் வாழ்ந்தவர். வாழ வேண்டும் என்று சொன்னவர். வாடியப்பயிரை கண்டபோதெல்லாம் வாடியவர். ஜீவ காருண்யமே கடவுள் வழிபாடு என்று சொன்னவர்.உயிர் இரக்கமே கடவுள் வழிபாடு என்றவர்.

ஜீவ காருண்யத்தால் மட்டுமே மோட்ச வீட்டின் திறவு கோல் கிடைக்கும் என்றவர். வேதம்



ஆகமம் புராணம் இதிகாசங்கள் சாத்திரங்கள் அனைத்தும் பொய் என்றும் அவற்றை நம்ப வேண்டாம் என்றும் ஆணித்தரமாக சொன்னவர். கணவன் இறந்தால் மனைவி தாலி வாங்கக் கூடாது என்றவர். மனைவி இறந்தால் கணவன் வேறு திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்றவர்.

தெய்வங்கள் பெயரால் உயிர்பலி செய்யக் கூடாது என்பதை தெளிவாக சொன்னவர். கடவுளைத்தேடி காடு, 2மலை,குகை,குன்றுகளுக்கு சென்று தவம் செய்ய தேவை இல்லை என்றவர். கடவுள் ஒருவரே ! அவர்தான் அருட்பெருஞ்ஜோதி என்பதை வெளிப்படுத்தியவர். அகத்தில் உள்ள உள் ஒளியான ஆன்மாவே ஒளியான கடவுள் என்றவர். தன்னை இயக்கும் ஆன்மாவை ஒவ்வொருவரும் காண வேண்டும் என்றவர்.

தன்னை அறிந்தால் தான் தலைவனை அறியமுடியும் என்றவர். அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரால் மட்டுமே அருளைப் பெற முடியும் என்றவர். மூட நம்பிக்கையை அடியோடு ஒழிக்க வேண்டும் என்றவர்.

எதிலும் பொது நோக்கம் வேண்டும் என்றவர். ஆன்மநேய ஒருமைப்பாட்டை உலகில் உள்ளோர் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும். கடைபிடிக்க வேண்டும் என்றவர். மூச்சி பயிற்சி, வாசியோகம், தியானம்,தவம், யோகம், போன்ற இயற்கைக்கு மாறாக எதையும் செய்யத் தேவையில்லை என்றவர். தவத்திலே மூழ்க கூடாது என்றவர். உயிர்களுக்கு உபகாரம் செய்வதாலே எல்லா நன்மையும் கிடைக்கும் என்றவர். ஆலய வழிபாடு. உருவ வழிபாடு செய்ய வேண்டாம் என்றவர்.

பொய்யான சாமிகளுக்கு அபிஷேகம் ஆராதனை, ஆட்டம் பாட்டம், கொண்டாட்டம் போன்ற காரியங்களை செய்ய வேண்டாம் என்றவர். எவரையும் தொடமாட்டார், தொட்டு பேசவும் மாட்டார். உண்மைக் கடவுளை


தனக்குள்ளே கண்டவர் உணவு உட்கொள்ளாமலே வாழும் வழியைத் தெரிந்து கொண்டு வாழ்ந்தவர். நரை, திரை, பிணி, மூப்பு, பயம், மரணம் இல்லாமல் வாழ்ந்தவர். கடவுளை ஒளி வடிவிலே கண்டவர். ஏழைகளின் பசிப்பிணியை போக்கு வற்காக,சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலையை தோற்றுவித்தவர். ஒளி வழிப்பாட்டிற்காக, சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை தோற்றுவித்தவர்.

தன் கொள்கைகளுக்காக சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தை தோற்றுவித்தவர்.சங்கத்திற்காக தனிக் கொடியான மஞ்சள் வெள்ளையை அறிமுகப்படுத்தியவர். மனிதர்களைப் பிரித்து வைத்த சாதி,சமய,மதங்களை அடியோடு ஒழிக்க வேண்டும் என்றவர். உலக மக்கள் ஒழுக்க நெறியோடு வாழ்ந்து இறைவன் திருஅருளைப் பெற வேண்டும் என்றவர். ஒழுக்கம் என்றால் என்ன என்பதை உலக மக்களுக்கு சொல்லிக்காட்டி.வாழ்ந்தும் காட்டியவர்.

உலக மக்களுக்காக உண்மை நூலான *திருஅருட்பா*வைத் தந்தவர். மரணம் என்பது இயற்கையானது அல்ல. செயற்கையானது என்பதை முதன் முதலில் உரக்கக்கூறியவர். மரணம் அடையாமல் ஒளி தேகத்தோடு வாழ்ந்து கொண்டு இருப்பவர்.

இறைவனிடம் ஐந்தொழில் வல்லபத்தைப் பெற்றவர்.மனித குலத்தை மாற்றவேண்டும் என்பதற்காக இறைவனால் வருவிக்க உற்றவர். அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரையே தாயாகவும் தந்தையாகவும் ஏற்றுக் கொண்டவர். தன் பெயருக்கு முன்னால் சிதம்பரம் இராமலிங்கம் என்றே கைஎழுத்து இடுவார். இப்படி எல்லா வகைகளிலும் வேறுபட்டவர் வள்ளல் பெருமான் அவர்கள்.

பாபாவின் ஆன்மீகம்



நாம் மத உணர்வாளர்களாக இருக்கிற வரை காய்களாகத்தான் இருக்கிறோம்! ஆகவே தான் பிறர் நம்மை வைத்து எளிதாக விளையாடுகிறார்கள்! எப்போது ஆன்மீக உணர்வாளராகிறோ மோ அப்போதுதான் நாம் கனிகளாக மாறுகிறோம்! பூஜையறையில் வந்து பால் குடிக்கிற பூனையை அடித்து விரட்டுகின்ற வரை நாம் மத உணர்வாளர்களாகத்தான் இருக்கிறோம்! அந்த வாயில்லா ஜீவனுக்குள்ளும் பகவான் பாபாவே திகழ்கிறார் என்று பூஜையறையி லேயே அதற்கு பால் விடுகிற போது ஆன்மீக உணர்வாளர் ஆகிறோம்!

இனப் பெருமையை பேசுவதை நிறுத்தி, குணப்பெருமையை பேசும் போதுதான் ஆன்மீகம் நமக்குள் ஆரம்பிக்கும். பகவான் பாபா எந்த மதத்திற்கான கடவுளும் அல்லர். எல்லா மதங்களின் ஒரே இலக்கான ஆன்மீகத்திற்கான கடவுள் பாபா! சடங்கிற்கான பரமாத்மா இல்லை. பாபா சிநேகித பிரேமைக்கான பரப்பிரம்மம்! தனது கோட்பாடே சரி என பிடிவாதம் பிடிப்பது மதம். எல்லா கோட்பாடுகளிலும் ஊடுறுவுகிற சகோதரத்துவ அன்பை மட்டுமே பார்த்து ஒற்றுமையை வளர்ப்பதே ஆன்மீகம்! அத்தகைய ஆன்மீகமே பாபாவின் ஆன்மீகம்!

இலவச சீரடி புனிதப் பயணம்

நமது சாயி மகராஜ் குருவைதேடி ஆன்மீக மாத இதழின் சந்தாதாரர்களுக்கு,"இலவச சீரடி தரிசன வாய்பை" வழங்குகிறோம்.

ஆயுள் சந்தாதாரர்களில் ஒரு அதிர்ஷ்டசாலி குழுக்கலின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு சாய் தியானாலயா நடத்தும் 6 நாள் சீரடி புனித யாத்திரையில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும், 5 வருட சந்தாதாரர்களில் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்பட்டு 4 நாள் சீரடி புனித யாத்திரையில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும் இலவசமாக பெறுவார்கள்.

3 வருட சந்தாதாரர்களில் ஒருவருக்கு ரூ.1000 மதிப்புள்ள சிறப்பு பரிசும், 1 வருட சந்தாதார்களில் ஒருவருக்கு ரூ.500 மதிப்புள்ள சிறப்பு பரிசும் வழங்கப்படும்.

ஏற்கனவே உள்ள சந்தாதாரர்களையும் சேர்த்து, வரும், 31.12.2023 வரை இணையும் புதிய சந்தாதாரர்களுடன் வருகின்ற 07.01.2024 அன்று நடைபெறும் 66 வது புத்தக வெளியீட்டு விழாவில், பக்தர்களின் முன்னிலையில் குலுக்கல் நடத்தப்பட்டு அதிர்ஷ்டசாலி சந்தாதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

சந்தா கட்டுங்கள்! அதிர்ஷ்ட வாய்பை பெறுங்கள்!

1 வருட சந்தா – ரூ. 220 / 3 வருட சந்தா – ரூ. 550
5 வருட சந்தா – ரூ.1000 / ஆயுள் சந்தா – ரூ. 2000

தொடர்புக்கு:

ஆசிரியர், V. ஸ்ரீராம், செல்: 99418 16692

அகத்தியர் ஆலய குடமுழுக்கு

சென்ற 20.10.2023 வெள்ளிக் கிழமை அன்று பெரம்பூர் விவே கானந்தா பள்ளி வளாகத்தில் அருள்மிகு லோபமுத்ரா தேவி சமேத அகத்தியர் ஆலய நூதன அஷ்டபந்தன மகா குடமுழுக்குத் திருவிழா காலை 10 மணிக்கு ஆன்றோர்கள், சான்றோர்களின் முன்னிலையில் மிகச்சிறப்பாக நடை பெற்றது.

குடமுழுக்குப் பெருவிழாவிற்கு தவத்திரு வாதவூர் அடிகளார் (தர்மமிகு சிவலோக மடம் சென்னை) திரு.எம்.என்.வெங்கடேசன் (சென்னை விவேகானந்தா கல்வி கழகம்) ஆகி யோர் சிறப்புவிருந்தினர்களாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

முதல்நாள் காலை ஏழு மணிக்கு கோ புஜை,வடு பூஜை,கன்யா பூஜை, கவாஸினி பூஜை, தம்பதி பூஜை, கணபதி ஹோமம், வாஸ்து ஹோமம், முதல் கால யாக சாலை பூஜை,



பூரணாஹீதி ஆராதனையும், மாலை 7 மணிக்கு, இரண்டாம் கால யாக பூஜை, பூரணாஹீதி ஆராதனை, மூர்த்திகள்



ஸ்தாபனமும், 20.10.23 காலை 7.30 க்கு மூன்றாம் கால யாக பூஜை, பூரணாஹீதி ஆராதனை, யாத்ரா தானத்துடன் கலச புறப்பாடும், மகா குடமுழுக்குப் பெருவிழாவும் மிகச்சிறப்பாக நடத்தப்பட்டன.

விழாவில், ஜனக்கல்யாண் திரு.வெ.சுப்பிரமணியன் அவர்கள் தொகுத்த "மாமுனி அகத்தியர் லோபமுத்ரா புகழ்மாலை" புத்தகத்தை திரு.வாதவூர் அடிகளார் அவர்கள் வெளியிட்டார்கள். அதைத்தொடர்ந்து அடிகளார் தனது இனிமையான குரலில் ஆன்மீக பாடல்களைப் பாடி பக்தர் களை மெய் மறக்கச் செய்தார்.

குடமுழுக்குப் பெருவிழாவில் விவேகானந்தா பள்ளி தாளாளர், முதல்வர், ஆசிரியர், அலுவலக பணியாளர், மாணவ, மாணவியர் மற்றும் ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாவில் கலந்து கொண்ட அனைவ ருக்கும் விழாக்குழுவினரால் சிறப்பான அன்னதானம் வழங்கப்பட்டது.

நாடு முழுவதும் உள்ள பள்ளி, கல்லூரிகளில் இதுபோன்று மாமுனி அகத்தியர் ஆலயங்களை நிறுவி மாணவச்செல்வங்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு வழி வகுக்க வேண்டும் என்பதே நமது அவா. அதற்கு முன்னோடியாக செயல்பட்ட விவேகானந்தா பள்ளி யின் ஆலய அமைப்பு குழுவினரை பாராட்டி மகிழ்கிறோம்.

குரு வாழ்க!
குருவே துணை!







"கேட்டது கிடைக்கும்" "நினைத்தது நடக்கும்"





தவத்திரு. சிவமுனியசாமி
சதுரகிரி மூலிகைமர சித்தர்

ஸ்ரீ நவக்கிரக மூலிகை விருட்ச ஆலயம் மற்றும்
பிரபஞ்ச ஆன்மீக அறிவியல் மூலிகை மரம் ஆராய்ச்சி
அறக்கட்டளை

வாருங்கள் உங்களது அனைத்து விதமான பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற
நவக்கிரக மூலிகை விருட்சங்களுக்கு நவதானிய நீர் விட்டு மனம் உருகி
வேண்டுங்கள் வெற்றியோடு செல்லுங்கள்

90803 96680 / 97870 40881
73396 46406 / 98653 24559

sivams1405@gmail.com
http://vkno.in/herbalmooligai
muniasamysivamuniyasamy

ஆசிரம முகவரி
E.V.புதூர், ஈசநத்தம் அஞ்சல்,
கரூர் மாவட்டம் - 639 203

கிளை அலுவலகம்
23, செல்லாண்டிபாளையம் சாலை,
ராயனூர், கரூர் - 639 003.



சாய் தியானாலயா தவ மையம் வழங்கும் 12வது புனித யாத்திரை

ONE & ONLY SHIRDI

4 நாட்கள், கட்டணம்: 3750/-

புறப்படும் நாள்: 06.03.2024 புதன்கிழமை

பார்க்கும் இடங்கள்: சீரடி ஸ்ரீ சாய் பாபா மந்திர், துவாரகாமாயி, சாவடி, லெண்டி பார்க், அப்துல்பாபா சமாதி, அடியவர்களின் சமாதி, லெட்சுமிபாய் வீடு, மகல்சாபதி வீடு, மாதவராவ் வீடு, பையாஜி வீடு, சிவநேசன் சமாதி, கந்தோபா ஆலயம், ரஹதா உபாசினி மகராஜ், குஷால்சந்த் வீடு, கற்பக விருட்சம், பஞ்சமுக கணபதி, வீரபத்ரா கோவில், ஜூவாலமுகி ஆலயம் ஓல்ட் சீரடி.

புனித யாத்திரையில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் ரூ.2000/ செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளவும்.

குரு ஸ்ரீராம்சாய் அவர்களுடன் சத்சங்கம், தியானத்துடன் ஓர் ஆனந்தப்பயணம்

அன்னதானமும், அணையாத அக்னியும்..!



உலகெங்கும் இருக்கும் சாயிபாபா ஆலயங்களில் இரண்டு விஷயங்கள் பொதுவாக இருக்கும். ஒன்று, அன்னதானம். இரண்டு, அணையாமால் எரியும் தூனி. அன்னதானத்தின் மகிமையைப் பற்றி பாபா பலமுறை சொல்லியிருக்கிறார். பசியுடன் துவாரகமாயிக்கு வந்த எவரையும் வெறுமையாகத் திருப்பி அனுப்பியதில்லை அவர். பாபா தன் கையால் சமைத்துப் பரிமாறிய தருணங்களும் உண்டு.

ஒவ்வொரு நாளும் பாபா வழக்கமாக மதியம் பூஜை ஆனவுடன் சாப்பிடுவார். பக்தர்கள் பலரும் பாபாவுக்காக எடுத்து வரும் நைவேத்தியங்களை ஒன்றாக அவரிடம் தருவார்கள். எல்லா தட்டுக்களிலும் இருக்கும் உணவுகளை ஒன்றாகப் போட்டு பிசைந்து, அதிலிருந்து அவர் இரண்டு கவளம் மட்டுமே சாப்பிடுவார். மீதியை பக்தரர்களுக்குக் கொடுத்து விடுவார். இந்தப் பிரசாதத்தை வாங்கிச் செல்வதற்காக பல மணிநேரத்துக்கு பக்தர்கள் காத்திருப்பார்கள்.

ஒருநாள் இப்படி பல்வேறு சுவையான உணவு வகைகள், மணக்க மணக்க வந்திருந்தன. பாபா அவற்றை முதலில் ஈஸ்வரனுக்கு அர்ப்பணித்தார். பிறகு சிறிது அவர் சாப்பிட்டார். எப்போதும் தன்னுடன் இருக்கும் தீவிர சீடர்களின் பக்கம் திரும்பிய அவர், "முன்னே வந்து தட்டை பிடியுங்கள்" என்றபடி பரிமாற எழுந்தார். அவர்கள் சந்தோஷத்துடன் தட்டை நீட்ட, பாபாவே அந்தப் பந்தி முழுவதிலும் உட்கார்ந்து இருந்தவர்களுக்கு பரிமாறினார்.

அவர்கள் அதிசயத்துடனும், மனநிறைவுடனும் சாப்பிட்டார்கள். பரிமாறுவது சாட்சாத் கடவுள் ஆயிற்றே! பிறகு பாபா, வெளியில் காத்திருந்த பக்தர்களையும் கூப்பிட்டார். அவர்களையும் உட்கார வைத்து அறுசுவை உணவு பரிமாறினார். திருப்தியுடன் அவர்கள் சாப்பிட்டு சந்தோஷமடைந்தார்கள்.

ஷீரடியில் பாபாவுடன் ஆரம்ப காலம் முதலே இருந்தவர் மகல்சாபதி. தூங்கும் நேரத்தில்கூட அவர் பாபாவைப் பிரிந்ததில்லை. அவரிடம் நடத்திய ஓர் உரையாடல் மூலம், அன்னதானத்தின் மகிமையை பாபா சொன்னார்.

"மகல்சாபதி, நீ தைத்திய



உபநிஷத் படித்திருக்கிறாயா? அதில் இந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. 'அன்னம் ப்ரம்ஹேதி வ்யாஜானத அன்னாத்வேயம் கல்விமானி பூதானி ஜாயந்தே அன்னேன ஜாதானி ஜீவந்தி அன்னம் ப்ரயந்த்யபிசம் விகன்தீதி' என்கிறது தைத்ரிய உபநிஷத்" என்று பாபா சொன்னார்.

"அப்படியென்றால்?" கேட்டார் மகல்சாபதி.

"சொல்கிறேன். கடவுளின் எல்லா லட்சணங்களும் உணவில் இருக்கின்றன. எல்லா உயினங்களும் உணவின் சத்தியிலிருந்து தான் வாழ்கின்றன. மேலும், மரணத்துக்குப் பிறகு நாம் உணவு சொரூபமாக மண்ணோடு கலந்து விடுகிறோம். மேலும், 'அன்னம் ந நின்த்யத அன்னம் பகு பரீச்க்ஷித அன்னம் பகு குர்வீத ந கஞ்சன வசதோ ப்ரத்யாக்ஷித' என்றும் அதில் இருக்கிறது.

அதாவது, உணவை பழிக்காதீர்கள், வெறுக்காதீர்கள், வீணாக்காதீர்கள். அதிகமாக உற்பத்தி செய்யுங்கள். எந்த ஒரு விருந்தாளியையும் இல்லை என்று சொல்லி ஏமாற்றி அனுப்பாதீர்கள் என்பதேயே இது உணர்த்துகிறது."

நீங்கள் சொல்வது உண்மை தான்" என்றார் மகல்சாபதி.

"உனக்கு ஒன்று சொல்கிறேன். இந்த உணவு தானியங்களை யார் உண்டாக்குகிறார்கள்? மனிதர்கள் அல்ல. இயற்கையின் உதவி இல்லாமல் மனிதன் ஒரு தூசியைக் கூட உருவாக்க முடியாது. எதை நம்மால் உருவாக்க முடியவில்லையே, அதன்மீது நமக்கு உரிமையில்லை. தானியங்கள் எல்லாருக்கும் பொதுவானவை.

எனவே, அவற்றைப் பதுக்கி வைக்காமல், தேவையானதை வைத்துக் கொண்டு, மற்றதை இல்லாதவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும். அவ்வாறு செய்யாமல் பதுக்கி வைப்பது நாசத்துக்கு வழிவகுக்கும் என்பதை நினைவில் வைத்துக்கொள்.

உடைகள், அலங்கார சாதனங்கள், பாத்திரங்கள் போன்ற மற்ற பொருட்களைத் தானம் செய்யும்போது, யார் அதற்கு ஏற்றவன் என்று பாத்திரம் அறிந்து கொடுக்க வேண்டும். ஆனால் அன்னதானம் செய்வதற்கு உயர்வு,

தாழ்வு என்று பார்க்க தேவை இல்லை.

யார் பசி என்று வீட்டு வாசலில் வந்து நிற்கிறானோ, அவனுக்கு உணவு கொடுப்பது தான் உயர்ந்த தர்மமாகும். வயிறு நிரம்பியவுடன் தான் நியாயம், தர்மம், பண்பாடு போன்ற மற்ற விஷயங்களை நினைக்கத் தோன்றும். பசியுடன் இருக்கும்பொழுது, நியாய தர்மத்தைப் பற்றிக் கேட்பவரோ, சொல்பவரோ யார்?" என்றார் பாபா.

தானத்தில் சிறந்தது அன்னதானம். ஷீரடி சாய்பாபாவினுடைய பிரார்த்தனைகளில் அன்னதானமே முக்கியமானது. அதை மனிதர்களுக்கு மட்டும் தான் அளிக்க வேண்டும் என்பதில்லை. இதை விளக்கும் ஒரு சம்பவம், சாய் சத்சரிதத்தில் உள்ளது.

பாபாவின் பக்தரான சந்தோர்கர், தினந்தோறும் முகம் தெரியாத புது மனிதர்களுக்கு உணவளிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆனால், பல நாட்கள் அப்படி உணவு பெற யாரும் வருவதில்லை. ஒருநாள் பாபாவிடம் அவர், "நான் தினந்தோறும் காக்கைகளுக்கு உணவு வைத்துவிட்டு அதிதிகளுக்காக காத்திருப்பேன். ஆனால். யாரும் வருவதேயில்லை. ஏன் பாபா இவ்வாறு நடக்கிறது?" என்று வெகுளித்தனமாகக் கேட்டார்.

"அதிதி என்பது யார்? மனித உருவத்தில் மட்டுமல்லாமல் பறவைகள், விலங்குகள், பூச்சிகள் உருவத்தில் இருப்பவை கூட அதிதிகள் தான். நீ உணவளிக்கும் போது அதனை உண்பதற்காக பசியுடன் யார் அல்லது எது வந்தாலும் அது அதிதிதான். உயிர் உள்ள எந்த ஜீவன் வேண்டுமானாலும் சாப்பிடட்டும் என்று நினை.

அப்படிச் செய்தால் அதிதிகளுக்கு உணவளித்த புண்ணியம் உனக்கு கிடைக்கும்" என்று சந்தோர்கருக்குச் சொன்னதன் மூலம் எல்லா பக்தர்களுக்கும் உணர்த்தினார் பாபா.

நோயுற்ற மனிதர், நாய், பூனை என நீங்கள் காணும் சகலமும் பாபாவின் ரூபமே. பசியாக இருக்கும் எந்த ஜீவனுக்கும் உணவளிப்பவர், உண்மையில் அந்த உணவை பாபாவின் வாயில் இடுவதாக அர்த்தம்.

அன்னதானம் போலவே பாபா அக்னிக்கும் முக்கியத்துவம் கொடுத்தார். தான் தங்கியிருந்த துவாரகாமாயியில் ஓர் அக்னி குண்டத்தை பாபா நிர்மாணித்தார். இதற்கு 'தூனி' என்று பெயர். இரவு, பகல் என எந்தநேரமும் இது அணையாமல் எரிந்துகொண்டே இருக்கும்.

இந்த நெருப்புக்கு வெறுமனே விறகுகளை மட்டும் போடாமல், பக்தர்கள் தங்களின் தீய எண்ணங்களையும் இதில் காணிக்கையாகப் போட்டு எரித்துவிட வேண்டும் என்றார் அவர். இதில் வெளிவரும் சாம்பலையே 'உதி' என்ற பிரசாதமாக பலருக்கு வழங்கினார் பாபா. நோய் தீர்க்கும் மருந்தாக அது இருக்கிறது.

"சகோதரர்களே! இந்த தூனி என்னை ஊக்குவிக்கிறது. எப்படி யென்றால், நாம் வாழ்வது நமக்காக மட்டும் அல்ல. பிறர் வாழ்க்கையில் ஒளி காட்டுவதற்காகவும், கெட்ட செயல்களையும் தவறான எண்ணங்களையும் பஸ்பம் செய்வதற்க்கும் வாழ்கிறோம் என உணர்த்துகிறது.

தவிர, சரீரத்தின் கடைசி ரூபம் 'சாம்பல்' என்பதை இந்த அக்னி எனக்கு போதிக்கிறது. இந்த 'தூனி' எனக்கு குருவாக இருந்து இந்த தத்துவங்களைக் கற்றுக் கொடுக்கிறது" என்கிறார் பாபா.

குரு வாழ்க! குருவே துணை!

திண்ணன் என்ற கண்ணப்ப நாயனார்!



பொத்தப்பி என்னும் மலை நாட்டில் உள்ள உடுப்பூர் என்னும் ஊரினை வேடர் குலத் தலைவன் நாகன் என்பவன் ஆட்சி செய்து வந்தான். அவன் மனைவியின் பெயர் தத்தை ஆகும். அவர்களுக்கு நீண்ட காலமாகப் பிள்ளைப் பேறு இல்லாமல் இருக்கவே, முருகனுக்கு விழா எடுத்தனர்.

அம்முருகனின் அருளால் பிறந்தவனே திண்ணன். திண் என்று இருந்த காரணத்தால் தன் மகனுக்குத் தந்தையாகிய நாகன் திண்ணன் என்று பெயரிட்டான். வேடுவர் குல மரபிற்கு ஏற்ப வில், வேல், ஈட்டி, முதலான ஆயுதங்களைக் கற்றுத் தேர்ந்தான் திண்ணன், அவன் கரிய நிறமும், உரத்த குரலும் உடையவன். தலை மயிரைத் தூக்கிக் கட்டியவன். தலையிலே மயிற்பீலி அணிந்தவன்.

சங்கு மணிகளும், பன்றிக் கொம்புகளும் கோத்த மாலையும், புலித் தோலினால் செய்யப்பட்ட தட்டை வடிவமான வெற்றி மாலையினையும் மார்பிலே அணிந்தவன். இடையிலே புலித் தோல் ஆடையணிந்தவன், குறுவாளையும் வைத்திருப்பவன். கால்களில் வீரக் கழல் பூண்டு, தோல் செருப்பு அணிந்தவன். வேட்டை யாடுவதற்கு நாயினைத் துணையாகக் கொண்டவன்.

தந்தை நாகனுக்கு வயது முதிர்ந்தது. அதனால் நாட்டுக்கு இடையூறு விளைவிக்கும் விலங்கு களை வேட்டையாட வேண்டி, தன் மகன் திண்ணனை வேடர் தலை வனாக்கினான் நாகன். ஒருநாள் நாணன், காடன் என்னும் இரு நண் பர்களோடு வேட்டைக்குச் சென்றார் திண்ணனார். காட்டில் திரிந்த வலிய பன்றியைத் தம் குறுவாளால் வீழ்த்தினார். அருகில் ஓடும் பொன் முகலி ஆற்றினையும் வானளாவி நிற்கும் காளத்தி மலையையும் கண்டு வியந்தார்.

நண்பர்கள், "இம்மலையில், குடுமித் தேவர் இருக்கிறார். அவரைக் கும்பிடலாம் வா" என்றார்கள்.

திண்ணனாருக்கு மலையேறும் போதே புதுவிதமான இன்பமும், உணர்வும் உண்டாயின. மலையேறிய திண்ணனார் பேருவகை கொண்டு ஓடிச் சென்று, காளத்தி நாதரைக் கட்டித் தழுவினார். ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார். மேலும் கன்றை ஈன்ற பசுவைப் போலப் பிரிய மனமின்றிச் சுழன்று சுழன்று இறைவனிடமே நின்றார்.



பின்பு பொன் முகலியாற்றங்கரையினருகில் காடன், தீயில் இட்டு பக்குவப்படுத்திய பன்றி இறைச்சியினைத் தம் வாயினால், சுவையும் பதமும் பார்த்துப் பின் ஒருகையில் அதனை எடுத்துக் கொண்டு, மற்றொரு கையில் வில்லம்பு ஏந்தினார். இறைவனது திருமஞ்சனத்திற்காகப் பொன்முகலியாற்று நீரை வாயில் நிறைத்துக்கொண்டு, பூசனைக்காகப் பூங்கொத்துகளைத் தம் தலையில் செருகிக் கொண்டு, மலையுச்சிக்கு வந்தார்.

குடுமித் தேவரின் மேல் இருந்த சருகுகளைச் செருப்பணிந்த தம் பாதங்களால் விருப்பமுடன் தள்ளினார். தம் வாயிலிருந்த நீரால் திருமஞ்சனம் செய்தார். தம் தலையில் இருந்த மலர்களைத் திருமுடி மீது சார்த்தி, பன்றி இறைச்சியினைத் திருவமுதாகப் படைத்து மகிழ்ந்தார்.

பின்பு குடுமித் தேவருக்கு இரவில் துணை யாருமில்லை என்று எண்ணி, இரவு முழுவதும் அவரே கையில் வில்லேந்திக் காவல் புரிந்தார். காலை புலர்ந்தது. திண்ணனார், காளத்தி நாதருக்குத் திருவமுது தேடிவரப் புறப்பட்டார். திண்ணனார் சென்றவுடன் வழக்கம் போல் சிவ கோசரியார் பூசை செய்ய வந்தார்.

சிவலிங்கத்தின் மேலுள்ள இறைச்சி முதலானவற்றை நீக்கி ஆகம முறைப்படி பூசை செய்து விட்டுச் சென்றார். திண்ணனார் முன் போலவே வேட்டையாடி விலங்குகளைத் தீயில் சுட்டு அமுதாக்கிப் படைத்திட வந்தார். தொடர்ந்து, சிவ கோசரியார் வழிபட்டுச் சென்றவுடன், திண்ணனார் வந்து அவற்றை நீக்கி வழிபடுவதும் தொடர்ந்தது.

தினமும் சிவன் திருமேனி மீது இறைச்சி இருப்பது கண்டு சிவ கோசரியார் வருந்தினார். மனம் கசிந்து இறைவனிடம் முறையிட்டு வீட்டிற்குச் சென்று உறங்கினார். அவரது கனவில் சிவபிரான், நீ கூறும் மறைமொழிகள் அவன் அன்பு மொழிகளுக்கு ஈடாகாது, நீ வேள்வியில் தரும் அவியுணவைக் காட்டிலும் அவன் தரும் ஊனமுது இனியது என்றும் இந்நிகழ்ச்சியி னை மரத்தின் மறைவில் நின்று பார்ப்பாயாக என்றும் கூறினார்.

அவனுடைய வடிவும், அவனுடைய அறிவும், எம்மை அறிவு என்றும்,

அவனுடைய செயல் எல்லாம் எமக்கு இனியது என்றும் அவனுடைய நிலை இவ்வாறு இருப்பதை நீ அறவாய் என்றும் அருள்செய்து திண்ணனாரின் பக்திச் சிறப்பைச் சிவபிரான் சிவாச்சாரியரிடம் கூறினார்.

திண்ணனார் தம் மீது கொண்டுள்ள அன்பின் பெரு மையைக் காட்ட, திருக்காளத்திப் பெருமான் தமது வலக்கண்ணில் இருந்து உதிரம் பெருகச் செய்தார். இதனைக் கண்ட திண்ணனார் செய்வதறியாமல் திகைத்தார். பூசைக் காகக் கொண்டு வந்த பொருள்கள் சிதறின. தம் கையால் இரத்தம் கசிவதைத் துடைக்கின்றார் ஆயினும் நிற்கவில்லை.

உடனே பச்சிலைகளைத் தேடிக் கொண்டுவந்து கண்ணின் மேல் வைத்துப் பார்த்தார். ரத்தம் வழிவது நிற்கவில்லை. இந்த நிலையில் திண்ணனார் அடைந்த துயரத்தையும், தவிப்புகளையும் சேக்கிழார் உணர்ச்சி மிக்க கவிதையாய் வடித்திருக்கிறார்.

பாவியேன் கண்ட வண்ணம்
பரமனார்க்கு அடுத்தது என்னோ
ஆவியின் இனிய எங்கள்
அத்தனார்க்கு அடுத்தது என்னோ
மேவினார் பிரிய மாட்டா
விமலனார்க்கு அடுத்தது என்னோ
ஆவது ஒன்று அறிகி லேன்யான்

என்செய்வேன் என்று பின்னும். இனி என்ன செய்வது என்று சிந்தித்து நின்றார்.

அப்பொழுது ஊனுக்கு ஊன் என்ற பழமொழி அவரது நினைவுக்கு வந்தது. உடனே அம்பினால் தமது வலக்கண்ணை அகழ்ந்தெடுத்து, ஐயன் திருக்கண்ணில் அப்பினார். இரத்தம்



நின்றுவிட்டது. இதைக் கண்டு மகிழ்ந்து ஆனந்தக் கூத்தாடினார். அடுத்து, சிவபிரான் தமது இடக்கண்ணிலும் உதிரம் பெருகச் செய்தார்.

அதைக்கண்ட திண்ணனார், 'இதற்கு யான் அஞ்சேன், முன்பே மருந்து கண்டுபிடித்துள்ளேன். அதனை இப்பொழுதும் பயன்படுத்துவேன். எனது இன்னொரு கண்ணையும் அகழ்ந்தெடுத்து அப்பி ஐயன் நோயைத் தீர்ப்பேன்' என்று எண்ணினார்.

தனது கண்ணை எடுத்து பொருத்த அடையாளத்தின் பொருட்டு, காளத்தி நாதர் திருக்கண்ணில் தமது இடக்காலை ஊன்றிக் கொண்டு, மனம் நிறைந்த விருப்புடன் தமது இடது கண்ணைத் தோண்டுவதற்கென அம்பை ஊன்றினார்.

அப்பொழுது குடுமித் தேவர் நில்லு கண்ணப்ப! என்று மூன்று முறை கூறித் திண்ணனாரைத் தடுத்தருளினார். மேலும், உனது அளப்பறிய அன்பினால் நீ என்றும் என் வலப்பக்கம் இருக்கக் கடவாய் என்று பேரருள் புரிந்தார். இதனைக்

கண்ட சிவ கோசரியார் தம்மை மறந்து சிவனருளில் மூழ்கித் திளைத்தார். இறைவனுக்கே தம் கண்ணைப் பிடுங்கி அப்பியதால் அன்று முதல் திண்ணனார் கண்ணப்பர் என்று அழைக்கப்பட்டார்.

சிவபெருமான் பெருமையை 100 சுலோகங்களில் பறை சாற் றும் சிவானந்தலஹரி என்ற தன்னுடைய நூலில் ஆதி சங்கரர் 63 வது சுலோகத் தில் கண்ணப்பரின் உள்நிறைந்த அன்பின் மூன்று செய்கைகளையும் குறிப்பிட்டு, இதுவன்றோ பக்தி, கடவுளன்பர் என்பதற்கு இவ்வேடுவனே இலக்கணம் என்கிறார்.

அச்சுலோகத்தின் உரை கீழ்வருமாறு, வழிநடைநடந்த மிதியடி பசுபதியின் அங்கத்திற்கு குறிகாட்டியாகிறது, வாயிலிருந்து உமிழ்ந்த நீர் புரங்கள் எரித்தவனுக்கு நீராடலாகிறது, சிறிதுண்டு சுவைகண்ட ஊனமுது தேவனுக்கும் படையலாகிறது,பக்தி என்னதான் செய்யமாட்டாது? அன்பரென்போர் வேடுவனன்றி வேறு எவர்? இந்த சுலோகத்திற்கு உரையாசிரியர்கள் உரை எழுதும்போது, இதனில் தீவிர பக்தியின் மூன்று படிகள் சித்தரிக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள்.

சுலோகத்தின் மூன்றாவது வரி முதல் படி. தான் சிறிது சுவைத்துவிட்டு மீதமுள்ளதும் அதே விதத்தில் தேனொழுக இனிக்கும் என்று சொல்வதில் ஒருவித நம்பிக்கைதான் இருக்கிறதே தவிர முழுமை யாக அறுதிப்படுவது இயலாது. அதனால் இது தீவிர பக்தியில் ஒரு சாமானியப்படிதான்.

சுலோகத்தின் இரண்டாவது வரி அடுத்த படி. வாயிலிருந்து உமிழ்ந்த நீர் ஆண்டவனுக்கு அபிஷேகமாகிறது. ஆனால் 'அது' என்னும் ஆண்டவனின் ஆனந்தத்தில் சங்கமமாகும் 'இது' என்னும் இந்த ஜீவனின் உமிழ்நீர் இன்னும் 'அது', 'இது' என்ற இரட்டையின் மயக்கத்தில்தான் இருக்கிறது. அதனால், இது தீவிரபக்தியின் அடுத்த மேல் படி என்று சொல்லலாமே தவிர தீவிரபக்தியின் உச்சகட்டமாகச் சொல்லமுடியாது.

சுலோகத்தின் முதல் வரியை தீவிரபக்தியின் உச்சநிலையாகச் சொல்லலாம். ஏனென்றால், பக்தன் தன் மிதியடியையே தேவனின் கண்ணில் வைக்கும்போது, அங்கு தேவன் வேறு தான் வேறு என்ற பாகுபாடெல்லாம் பறந்து போய் விட்டது. 'தத் த்வம் அஸி' (அதுவே நீ) என்ற உபநிஷத்து மகாவாக்கியப்படி, அந்தப் பரம்பொருளே இந்த ஜீவன் என்ற இலக்கணம் ருசுவாகிறது! என்கிறார் ஆதி சங்கரர்.

கண்ணப்பனுக்கு ஈடான அன்பு என்னிடம் இல்லாவிட்டாலும் கூட சிவம் எம்னையும் ஆட்கொண்டு அருளியதாகத் திருகோத்தும்பியில் குறிப்பிடுகின்றார் மாணிவாசகர்.



தொடர் –28

சாய் சரவணன்

"அதி தேவதை"

ஆன்மீக முன்னேற்றத்தில் சிறிதளவு உயர்ந்த ஒரு ஜீவன் காம குரோதத்திற்கு வசப்பட்டு மக்களின் இடையே பெயர், புகழ் சம்பாதிக்க ஆசைப்பட்டு மாந்திரீக முறையில் சக்திகள் கொண்டு தவறான பாதையில் சென்ற வரை பாபா தடுத்தாட்கொண்டு சரியான பாதையில் நடைபோட வைத்த அற்புத லீலை இது.

கிருஷ்ணாஜி காசிநாத் ஜோஷி என்ற இயற்பெயர் கொண்ட குசபாவ் பட்டதாரியாகி ஆசிரியர் பணி புரிந்தவர். இவர் ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டு "தத்த மகராஜ்" என்ற குருவிடம் அடைக்கலம் ஆனார். குருவான தத்த மஹராஜிடம் இருந்து பலவிதமான ஆன்மீக முன்னேற்றம் அடைந்த குசபாவ் மந்திர தந்திர முறைகளை கற்றுத் தரும்படி குருவிடம் கேட்க, குருவும் அனைத்தையும் கற்றுத் தந்தார்.

மந்திர உச்சாடனம் செய்கையில் தீய சக்திகள் தன்னை தீண்டாத படிக்கு ஓர் இரும்பு வளையத்தை கையில் அணிந்திருந்தார் குசபாவ். தான் இருந்த இடத்தில் இருந்து கொண்டு இனிப்புகளை வரவழைத்து மக்களுக்கு விநியோகம் செய்தார். பிறருடைய ஏவல், மாந்திரீக சக்திகளை வெல்லும் அளவிற்கு திறமைசாலியாக இருந்தார்.

இதனால் பெயர், புகழ் அடையலாம் என ஆசை கொண்டார். அப்போது



குசபாவ்வின் வயது 22. அதே சமயம் குரு தத்த மஹராஜ் சிஷ்ய பந்தம் எதுவும் வேண்டாம் என நினைத்து தனிமையில் வாழ இமயமலைக்கு புறப் பட்டார். கூடவே குருவை வழியனுப்ப குசபாவ் டெல்லி வரை சென்றார்.

தன் சீடனுக்கு இறுதி அறிவுரையாக "நீ சீரடியில் வாழும் என் மூத்த சகோதரர் ஆன சாயி பாபாவை தரிசித்து அடைக்கலம் ஆவாய்" என உத்தரவிட்டார். (வாசுதேவானந்த சரஸ்வதி சுவாமியும் ஸாயியை தன் சகோதரர் என குறிப்பிட்டு அழைத்தது குறிப்பிடத்தக்கது) பின் குருவின் ஆணைப்படி குசபாவ் 1908ல் சாயி பாபாவை தரிசிக்க ஷீரடிக்கு வந்தார்.

மசூதியின் முன் குசபாவ் நின்றபோது பாபா அவரை உள்ளே வர அனுமதி தரவில்லை. காரணம் பாபா தன் மசூதியில் ஏற மந்திர தந்திரம் கொண்ட எவனுக்கும் இடம் இல்லை என கொள்கையை கடைபிடித்தவர். ஆகவே பாபா குசபாவ்விடம் "நீ கையில் அணிந்திருக்கும் இரும்பு வளையங்களை தூக்கி எறி, பேடாக்களை வரவழைப்பதை நிறுத்து அதன் பின் இங்கு வா" என உத்தர விட்டார்.தன் குரு தத்தமகராஜ்க்கு அடிபணிந்து பாபா விட சொன்னதை அறவே விட்டுவிட்டார். பிறகு பாபா குசபாவ்வை மசூதியில் ஏற அனுமதி தந்தார்.


குசபாவ்வை பாபா மசூதியில் ஓர் மூலையில் அமர்ந்து ராமதாஸ் சுவாமியின் தாசபோதத்தை பகல் நேரத்தில் பாராயணம் செய்யும்படி உத்தரவு விட குசபாவ் படித்தார். குசபாவ்வின் மனதில் இருக்கும் தேவையற்ற எண்ணங்களை பாபா முறியடித்தார். மேலும் அவரது மனம் பக்குவம் வரும்படியாக வழியும் காட்டினார். குசபாவ் ஆன்மீக சக்தியை அடைவதற்கு நல்ல மனநிலையில் இருக்கும்படி பாபா அனுக்கிரகம் செய்தார்.

குருவின் மகத்துவம் பற்றி தெரியவைக்க பாபா குசபாவ்வை "நீ இராமகிருஷ்ணியிடம் செல்" என ஆணையிட்டார். குசபாவ் தத்த மஹராஜ்டம் நல்ல முறையில் சேவகம் செய்தவர். ஆயினும் தேவையற்ற சித்திகளில் மயங்கி வழி தவறினார். பாபா அவரை தன்னிடம் இழுத்து அவர் மனதைப் பக்குவப்படுத்தி தூய்மை ஆக்கினார். தூய்மையான மனம் கொண்ட குசப்பாவின் மனதில் இராதாகிருஷ்ணமாயி குருவின் மகத்துவத்தைப் பற்றி கூறி சாயிநாதரின் பூரண அருள் கிடைக்க செய்யப்போகிறாள். பாபாவின் ஆணைப்படி குசப்பாவ் ஆயியின் பிருந்தாவனத்திற்கு வந்தார்.

அது சமயம் ஆயி ஏகநாதரின் பாகவத்தை படித்துக் கொண்டிருந்தாள். குசபாவ்வை ஆயி கண்டுகொண்டு வரவேற்றாள். ஆயியின் பிருந்தாவனத்தில் குசபாவ்வின் மனம் ஓர் வசீகரமான இன்ப உணர்வில் திளைத்தது. பிறகு இராதாகிருஷ்ணமாயி குசப்பாவிடம் உரையாடச் செய்தாள். ஆயி குசப்பாவிடம் அவரது ஆரம்ப வாழ்விலிருந்து ஷீரடிக்கு வந்த வரை அனைத்தையும் கூறினாள்.

குசப்பாவின் மனம் பதறியது. குசப்பாவின் மனதில் இருந்த கொஞ்ச நஞ்ச குழப்பங்களையும் தீர்த்து விட்டாள் ஆயி! "ஆயி குசப்பாவிடம் ஏகநாதருடைய வாழ்வில் ஏற்பட்ட சம்பவத்தை நான் உங்களுக்கு கூறுகிறேன். அதை சிரத்தையுடன் கேட்டால் குருவின் அருள் உங்களுக்கு கிடைக்கும் என்றாள். கதை தொடங்கியது.

ஓர் நாள் அந்தி சாயும் வேளை தனில் ஜனார்த்தன சுவாமி அமர்ந்து ஜப தப அனுஷ்டானத்தை செய்தார்.



அவருக்கு உதவி புரிய சிறந்த சீடனாக ஏகநாதர் அருகிலேயே நின்றிருப்பார், பூஜை முடிவுற்றதும் குரு தன் வீட்டிற்கு வந்தார். குருநாதரின் நிழல் போல் ஏகநாதர் இருந்தார்.

திடீரென்று குரு வாந்தி எடுக்க, ஏகநாதர் அதை பாத்திரம் ஒன்றில் பிடித்தார். குரு கூறினார் "அடேய் ஏகநாதா நீ அதை எவர் காலிலும் படாதவாறு உள்ள ஒரு இடத்தில் கொட்டி விடு" என்றார். ஏகநாதரோ குரு வாந்தி எடுத்த பாத்திரத்தோடு சிறிது தூரம் சென்றான்.

ஏகநாதர் ஒரு கணம் சிந்தித்தார். குருவே கடவுள், குருவே பரப்பிரம்மம், அவரது உடை, நடை, பாவனை, உபதேசம் யாவும் காண கிடைக்காத ஒன்று. மேலும் குரு உண்டு மீதம் இருக்கும் உச்சிஷ்ட பிரசாதம் எவ்வளவு மகிமை வாய்ந்தது. அவர் வாக்கு எப்பேற்பட்டது. இவை யாவும் உயர்ந்தது என்றால் குருவின் வாந்தியும் கூட அமிர்தமே என எண்ணி குருவின் வாந்தியை பிரசாதமாகக் கருதி குடித்து விட்டார் ஏகநாதர்.

ஏகநாதர் செய்த இந்த வியத்தகு குரு பக்தியை கண்ட குருநாதர் ஓடிவந்து ஏகநாதரை கட்டிப்பிடித்துக் கொண்டார். அப்படிப்பட்ட உத்தம சிஷ்யனுக்கு தன் இறைவன் ஆன தத்தாத்ரேயரையும், விட்டலனையும் தரிசனம் செய்து வைத்தார், குரு ஜனார்த்தன சுவாமி. குருபக்தியின் சக்தி என்ன வேண்டுமானாலும் செய்யும் என கதையை கூறி முடித்தாள் ஆயி!.

இக்கதையில் உட்பொருளான குருவே தெய்வம் என்றும் குருவே சகலமும் என்ற உண்மையை புரிந்து கொண்டார். குருவின் சேவையே மகத்தானது எனும் உட்பொருளை மனதில் பூர்ணமாக வாங்கி கொண்டார் குசபாவ். அதுமட்டுமின்றி குருவான சாயியிடம் இனி எதையும் எதிர்பார்க்காது அவருக்கே அடிமை யாகி அடிபணிவதே உத்தமம் எனும் எண்ணம் குசப்பாவின் மனதில் உதித்தது. இராதாகிருஷ்ணமாயியோ குசப்பாவிடம் நாளை ஏகாதசி உபவாசம் இருக்கும் பழக்கம் உண்டா என கேட்க, அவரோ ஆமாம் உண்டு என பதில் கூறினார்.

பிறகு குசபாவ்விற்கு ஆயி சிறிது அட்சதையை தந்து இனி நன்மையாவும் உண்டாகும் எனக்கூறி நீங்கள் போகலாம் எனக் கூறினாள். மந்திரத்திற்கு கட்டுபட்டதை போல குசபாவ் ஏதும் பேசாமல் ஆயி கூறிய ஏகநாதரின் குருபக்தியை நினைத்துக்

கொண்டே சென்று விட்டார்.

காரணமின்றி குசபாவ்வை பாபா ஆயியிடம் அனுப்பவில்லை. அதற்கான லீலையை பாபாவே இப்போது உணர்த்த போகிறார். மந்திர தந்திரத்தை நினைத்து அதையே உச்சாடனம் செய்யும் குசப்பாவின் மனம் குருவின் முக்கியத்துவத்தை அறிந்து மனதை சமாதானப்படுத்திய படி அன்றைய நாளை கழித்தார். மறுநாள் உதயமானது. குசபாவ் குருவான சாயிநாதரிடம் ஆசி வாங்க மசூதிக்கு வந்தார். அப்போது பாபாவோ வா! வா! என அழைத்தார். சாயிநாதர் குசபாவ்வை பார்த்து "நீ இன்று என்ன சாப்பிடுவாய்" என கேட்டார்.

இன்று ஏகாதசி சர்க்கரைவள்ளி கிழங்கு தவிர வேறு எதையும் சாப்பிட மாட்டேன் என்றார் குசபாவ். ஓ, அப்படியா அப்படியானால் இதோ இந்த வெங்காயத்தை சாப்பிடு என்று கொடுத்தார் பாபா.

அப்போது குசபாவ்விற்கு ஏகநாதரின் குரு பக்தி நினைவுக்கு வந்தது. சரி என நினைத்து குசபாவ் பாபாவிடம் சொன்னார். பாபா நீங்கள் சாப்பிட்டால் நானும் சாப்பிடுவேன் எனக் கூறினார். பாபாவும் சரி என கூறி முதலில் பாபா பாதி வெங்காயத்தை உண்டு மீதத்தை குசபாவிடம் தந்தார். அவரும் சாப்பிட்டார். அது சமயம் சாயி வேடிக்கை செய்ய ஆரம்பித்தார்.

பாபா பக்தர்கள் எல்லோரும் வாருங்கள் என கூச்சலிட்டார். அனைவரின் முன்னிலையில் பாபா குசபாவ்வை சுட்டிக் காட்டி "பாருங்கள் இந்த பிராமணன் ஏகாதசி தினத்தில் வெங்காயத்தை உண்கிறான்" என கூச்சலிட்டார். குசபாவ் இல்லை, இல்லை பாபா சாப்பிட்டதனால் நானும் வெங்காயம் சாப்பிட்டேன் என சமாதானம் செய்தார்.

பாபா அப்போது "இவன் பொய் சொல்கிறான் இதோ இப்போது வாந்தி எடுக்கிறேன். அப்போது தெரியும் உண்மை" என கூறி வாந்தி எடுத்தார் பாபா, பார்த்தால் வெங்காயத்திற்கு பதில் இனிப்பு கிழங்கே காணப்பட்டது.

அடுத்த கணமே குசபாவ் ஆயி கூறிய ஏகநாதரின் சம்பவம் நியாபகம் வர இதில் ஏதோ ஒற்றுமை இருப்பதை உணர்ந்து ஏகநாதரைப் போல பாபாவின் வாந்தியை அப்படியே எடுத்து சாப்பிட்டு விட்டார் குசபாவ். அப்போது பாபா குசபாவ்வை பயங்கரமாக அடித்தார், உதைத்தார், வசைபாடினார். ஏன் என் வாந்தியை எடுத்து சாப்பிட்டாய்? என கேள்வி கேட்டவாரே திட்டி தீர்த்தார்,

குசபாவ்வின் மனதில் ஆயி விதைத்த விதை முளைக்கத் தொடங்கியது. ஆதலால் குசபாவ் பாபாவின் செய்கையினைக் கண்டு எதுவும் பேசாத படி பாபாவின் முன்னால் அப்படியே நின்றார். பக்தர்களோ பாபாவின் ஆவேசத்தால் அங்கும் இங்கும் சிதறி ஓடினர்.

– தொடரும்

சாயிமகராஜ் குருவைதேடி இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

தொடர் –4

சுந்தர்சாய்

திருவருள் தேடி



ஓம் சாய்ராம்.

சாய் அன்பர்கள் தாள் வணங்கி சுந்தர் சாயி தொடரும் திருவருள் தேடி தொடரில், சத்ய சாய் மகராஜ் கருணை மழையாய் பொழிந்த அனுபவங்களை திரும்பி பார்க்கையில் சென்ற இதழில் நாம் 'ஒரு லக்கி டிப்' பெட்டியில் எனது பையனுடைய விருப் பத்திற்காக எங்கள் முகவரி நிரப்பப்பட்ட சீட்டை போட்டு வந்த கதையில், இறைவனின் அரவணைப்பில் வெளிநாட்டில் வேலை வாய்ப்பைத் தந்து ஆசிர்வதித்ததைப் பற்றி எழுதியிருந்தோம்.

அதன் தொடர்ச்சியாக அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொண்டு மும்பையில் ஒரு அறிமுகப் பயிற்சியில் கலந்து கொண்டு, அங்கிருந்தே நேரடியாக டெல்லி சென்று அங்கு ஒரு இரவு தங்கி, அங்கிருந்து விமானத்தில் ரஷ்யா செல்ல ஏற்பாடாகி இருந்தது. நானும் விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்தேன் அப்போது எனக்கு "அதிசயமான செய்தியுடன் ஒரு தொலைபேசி அழைப்பு." வந்தது.

என்னுடைய மகன் ஹைதராபாத்தில் இருந்து அழைத்து மிக்க மகிழ்ச்சியுடன் ஒரு விஷயத்தை தெரிவித்தார். அன்று ஏப்ரல் 1ஆம் தேதியாக இருந்ததால் என்னை முட்டாளாக்க முயற்சி செய்கிறார் என்று உஷாராக இருப்பதாக நினைத்து நானே ஏமாந்து போனேன். ஆம் உண்மையை பொய்யாக நினைப்பதும் முட்டாள் தனம் தானே, அந்த வடிகட்டிய முட்டாள்தனமாகத்தான் பலரது நிலைமை இன்றிருக்கிறது.

அந்த மகிழ்ச்சியான செய்தி, எங்களுக்கு குலுக்கலில் "முதல் பரிசு" சாய் கிருபையால், அதுவும் அந்த பரிசு என்ன என்று தெரிந்தவுடன் அது சர்வ நிச்சயமாய் சாய் கிருபைதான் என்று ஊர்ஜிதமானது. அந்த பரிசு 'டெஸ்க் டாப் கம்ப்யூட்டர்' + ஒரு வருட இலவச இன்டர்நெட் இணைப்புடன். குடும் பத்தை இந்தியாவில் விட்டு விட்டு நான் மட்டும் தனியாக வெளிநாடு செல்வதால் சத்ய சாய்ராம் எனக்களித்த இந்தப் பரிசு எவ்வளவு உயர்ந்தது

என்பதனை நினைத்துப் பாருங்கள்.

"காலத்தினால் கிடைத்த முக்கிய திருவருள்." அன்றோ! இதை நான் உணர்ந்த பொழுது என் மனநிலை எப்படி இருந்திருக்கும் என்பதை தங்கள் கணிப்பிற்கே விட்டு விடுகிறேன். இதற்கு பெயர் தான் இறைவன் கொடுத்தால் "கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுப்பது!" என்பார்களோ! ஹே! சாய்ராம். நன்றி என்பது இறைவனுக்கு நம்மால் கொடுக்க முடிந்த மிகச்சிறிய பரிசு மட்டுமே என்பதால் மிகுந்த ஆலோசனைக்குப் பிறகு எனக்கு குறைவில்லா வாழ்வளித்த என் இனிய இதயம் நிறைந்த சத்யசாய் பகவானுக்கு "என்னையே"(நான் என்கிற அகம்பாவம்) அவரது தாமரை மலர்ப் பாதங்களில் சமர்ப்பணம் செய்வது என்று முடிவாயிற்று. அன்று முதல் இன்று வரை 'பரிபூரண நம்பிக்கையை' சாய் பகவானிடம் வைத்து வாழ்வை வளமாக்கிக் கொண்டாயிற்று.

நமது வாழ்வு வளமானால் போதுமா? இங்கு தான் இறைவன் நம்மை கூர்ந்து கவனிப்பதாக தோன்றுகிறது. யாம் பெறும் இன்பம் இவ்வையகம் பெற்றிட நம்மால் இயன்றதை செய்வதும் அவசியமல்லவா? அதற்கான முயற்சிதான் இந்த பகிர்வு. குடும்பத்தில் நடுநாயகமாக விளங்கிய நம்மை நம்பிய மூன்று ஜீவன்களையும் ஒரு பாஷை, பழக்கமில்லாத இடத்தில் விட்டு செல்வதால் என் மனம் நிம்மதியின்றி தவிப்பதை உணர்ந்த சாயி பகவான் கருணையுடன் இந்த கொடையை அளித்து அதுவும் நாட்டை விட்டு கிளம்பும் முன்னரே இந்த விஷயத்தையும் தெரியப்படுத்தி விடைக் கொடுத்தனுப்பியது எத்தனை காருண்யம்? அந்த காலகட்டத்தில் கைப்பேசி அவ்வளவு பிரபலமில்லை. தொலைபேசியும் அந்த நாடுகளில் சரியாக வேலை செய்வதில்லை. பல தடங்கல்களுக்கு நடுவில் 'இன்டர்நெட்' மட்டுமே ஒரு உதவிக்கரம் வெளிநாட்டில் வாழ்பவர்க்கு. இவை எல்லாம் எமக்குப் புரிந்தது அங்கு சென்ற பின்னர்தான். ஒரு வழியாக புதிய நாட்டில், புரியாத பாஷை, மக்கள், வானிலை, வாழ்க்கை முறை, உடன் வேலை செய்பவர்கள் என எல்லாமே ஒரு சவாலாக அமைய அதுவே நமக்கு ஒரு உற்சாகத்தை அளித்தது என்றால் அதுவும் நம் சத்ய சாய் நம் மீது பொழிந்த அபரிமிதமான அன்பினால் தான்.

அங்கு எல்லாரும் ஒருவித அன்பு டன் பழகி ஆதரித்ததால் சமையல் கூட தெரியாத எமக்கு உணவளித்து, சமைக்க கற்றுக் கொடுத்து என, எல்லா வகையிலும் ஏதோ ஒரு உருவத்தில் வந்து எம்மை வழி நடத்தியது அந்த பிரபஞ்ச சக்தி என்பதை உணர வைத்த வாழ்க்கை அனுபவங்கள்தான் எத்தனை ஆச்சர்யமான ஒன்று.



குறுகிய காலத்தில் அங்கு நல்ல பழக்கம் ஏற்பட்டு வேலையில் எல்லா வழிகளையும் நாமேதான் வகுத்து அங்குள்ள அரசாங்கத்தில் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் அவர்கள் அனுமதி பெறுவது ஒரு 'பிரம்ம பிரயத்னம்' என்றும் கூட சொல்ல வைக்கும் சூழ்நிலை. அங்கு எல்லாவற்றையும் கண் காணிக்கும் அரசாங்கம், சந்தேகப் பார்வையுடன் கவனிக்கும் அதிகாரிகள், காவல்துறை என நமக்கு ஒரு புதிய 'த்ரில்லிங்' அனுபவம். அங்கு எமக்கு 'மார்க்கெட்டிங்' பொறுப்பு என்பதால் முக்கியமான தகவல் சேகரிப்பு, நமது தயாரிப்பு மருந்துகளை பற்றிய எல்லாவித விஞ்ஞானத் தகவல்களை பகிர்வது என ஆங்கிலமே உபயோகத்தில் இல்லாத முழுமையும் ரஷ்ய மொழியில் செய்வது ஒரு பெரிய சவாலாகவே இருந்தது. தும்மல், இருமல் கூட வித்தியாசமாகவே இருந்தது.

தனியாக எங்கும் செல்வதும் கடினம். பாஷை, மற்றும் பாதைகள் தெரியாத தால் ஒவ்வொரு நூறு அடிக்கும் பத்து காவலர்கள், பாஸ் போர்ட், விசா, குடியிருப்பு சோதனை என அனைத்தும் புதிதாகவும், வித்தியாசமாகவும் இருந்தது. இறையருளால் இந்தியர்கள் என்பதால் நம் மீது ஒரு அன்பை காட்டுவார்கள் ரஷ்யர்கள். முக்கியமாக நமது ஹிந்தி திரைப்படங்கள் ஒரு நட்பு பாலத்தை உருவாக்கி வைத்திருந்தது.

"ராஜ்கபூர் என்றால் அவர்களுக்கு மிகவும் பிரியம். அவர் நடித்த குடும்ப உறவுகள், நட்புகள் பற்றிய படங்கள் எல்லாம் நம்மை ஒரு மரியாதை கலந்த நட்புடன் பார்க்க வைத்தது என்றே கூறலாம். அங்குள்ள மக்கள் எல்லாம் ஒரு விதமான



பதட்டமான வாழ்க்கையே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இளம் வயது முதலே எப்பொழுது வேண்டுமானாலும் ராணுவ நடவடிக்கை, போர் தளவாடங்கள், டாங்க் நடமாட்டம் மட்டுமின்றி இயற்கை சீற்றமான மிகப்பெரிய அளவில் நிலநடுக்கம் என 'நித்ய கண்டம் பூர்ண ஆயுள்' என வாழ்பவர்களுக்கு தம்மைப் போன்று ஓர் அமைதியான வாழ்க்கை, உறவுகளைக் காண்பதில் ஓர் அபூர்வ ஆச்சர்யம் அந்நாட்டு மக்களுக்கு.

இப்படித் தொடங்கிய எமது வெளிநாட்டு வேலை என்கிற பயணத்தில் நமக்கு ஏற்பட்ட ஒரு திடீர் திருப்பமாக, "ஒருவித நடுக்கமான போர் அனுபவம்", இங்கு இருக்கும் நமது உறவுகளுக்கு ஏற்பட்ட பதட்டமான சூழ்நிலை, நம்மை உடனே இந்தியா திரும்ப சொல்லி தொலைபேசியில் வந்த தொடர் அழைப்புகள் பற்றி அடுத்த இதழில்.!

எல்லாம் சாய்! எங்கும் சாய்!

குரு வாழ்க! குருவே துணை!!

– தொடரும்.



உறுதியான மலை!

"யாராவது நம்மை ஞானி என்று இசை பாடினாலும், முட்டாள் என்று வசை பாடினாலும் நாம் ஒரே வித மனநிலையில் இருக்க வேண்டும்! அது எப்படி? ஞானமோ முட்டாள்தனமோ இரண்டுக்குமே நாம் சொந்தமல்ல என்பதை உணர்வதால் அந்த சமநிலை ஏற்படும்! காரணம் ஆன்மா ஞானத்திற்கும், முட்டாள்தனத்திற்கும் அப்பாற்பட்டது! நாம் ஆன்மாவே!

நன்மை செய்கிற போதே உலகில் நமக்கு அதிகமான எதிர்ப்பும், எதிர்மறை விமர்சனமும் எழுகிறது! அந்த நன்மையில் ஏதேனும் ஒரு குறை இருக்காதா? என்று தேடுவார்கள். ஆகையால் நாம் நமது சாயி சேவையை எந்தவித பாதிப்பும் இன்றி பலன் கருதாமல் செய்து கொண்டே கடந்து போக வேண்டும்!

நன்மையான செயல்களுக்கு எல்லாம் பகவான் பாபாவின் சங்கல்பம் நமக்கு காவலாக துணை இருக்கிறது! "உனக்கென்ன தகுதி? நீ யார் செய்வதற்கு?" என்கிற விமர்சனங்களின் மீது கவனம் வைக்காதீர்கள். நன்மை செய்வதற்கு நமக்கு சுயநலமற்ற திட வைராக்கியமே போதுமானது! அதுவே மலை! எந்த புயல்களாலும் மலைகளை புரட்டிப் போட முடியாது.

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன்
M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. **வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.**

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

ஆண்டிமடம்



ஆண்டிகள் கூடி மடம் கட்டிய கதை என்று கிண்டலாக கூறுவார் கள் ஆனால், உண்மையிலேயே ஆண்டிகளால் உலகமே வியக்கத்தக்க வகையில் கட்டப்பட்டுள்ளது அருள்மிகு திருசெந்தூர் சுப்பிரமணிய சுவாமி ஆலயம்.

பொதுவாக யாரும் கடற்கரையை ஒட்டி பெரிய கட்டிடங்கள் கட்டுவ தில்லை. கடற்கரைப் பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் தரைக்கு மிக அருகில் இருக்குமாதலால் இங்கு கட்டப்படும் கட்டிடங்கள் விரைவில் பலவீனமாகி விடும். அப்படியே கட்டினாலும் தரை மட்டத்திலிருந்தும் கடல் மட்டத்தில் இலிருந்து உயரமான மேடைகளை அமைத்து அதன் மேல் கட்டுவார்கள். ஆனால், திருச்செந்தூர் முருகன் கோயில் கடற்கரையிலிருந்து வெறும் 67மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

133 அடி உயரமுள்ள இந்த திருக்கோயிலின் ராஜ கோபுரம், கடற்கரை யிலிருந்து 140மீட்டர் தொலைவில்தான் அமைந்துள்ளது. எல்லாவற்றையும் விட பெரிய வியப்பு இந்த கோயிலின் கருவறை. இது தரை மட்டத்திலிருந்து 15 அடியும், கடல் மட்டத்திலிருந்து 10 அடியும் தாழ்வான இடத்தில் கட்டப்பட்டுள்ளது.

அதாவது இயற்கையாக அமைந் துள்ள குகை போன்ற அமைப்பில் இருந்த சுப்பிரமணிய சுவாமியின் கருவறையும் அதன் அருகில் பின் பக்கம் சற்றே கீழே உள்ள ஐந்து லிங்கங் களையும் சுற்றியே இந்த திருக்கோவிலின் பிரகாரங்கள் கட்டப்பட்டுள்ளன.

இன்னும் பல அறியப்படாத அறி வியலையும், நமது தொல்லியல் விதிகளையும் நிறைவாக உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ள இக்கோவில், ஐந்து சாதுக்கள் மற்றும் பல சாதாரண மனிதர்களை கொண்டே உருவானது. எந்த அரசனும் தன் பெருமையை நிலை நாட்ட கட்டப்பட்டது அல்ல என்பதும் மிக சிறப்புக் குரிய விஷயம்.



திருச்செந்தூரைப் பற்றிய விவரங்கள் தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு, திருமுருகாற்றுப்படை சிலப்பதிகாரம் போன்ற சங்ககால இலக்கியங்களில் காணப்படுவதை நாம் கருத்தில் கொண்டால், இந்த கோயில் கட்டப்பட்டு குறைந்தது 3000 ஆண்டுகளுக்கு மேல் இருக்குமென்று நாம் அறிந்து கொள்ளலாம்.

இவ்வளவு ஆபத்தான இடத்தில், கடலுக்கு மிக அருகில் துணிந்து கட்டப்பட்ட இந்த திருக்கோயில் இத்தனை ஆண்டுகளாக எந்தவித பாதிப்புகளு மில்லாமல் கம்பீரமாக நிற்பதை பார்க்கும் போது நமது முன்னோர்களின் கட்டிடக்கலை அறிவும் திறமையும், கடவுள் மேல் அவர்களுக்கிருந்த மிகுந்த நம்பிக்கையும் நம்மை வியப்பில் மூழ்கடித்து விடுகிறது.

திருச்செந்தூர் சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் திருப்பணி செய்து ஆலயத்தை கட்டியவர்களும் புனரமைப்பு பணிகள் செய்த ஆண்டிகள் ஐந்து பேர்கள். அவர்கள்,

1. மௌன சுவாமி 2. காசி சுவாமி

3. ஆறுமுக சுவாமி இவர் ராஜகோபுரம் கட்டியவர் 4. ஸ்ரீ வள்ளிநாயக சுவாமி

5. தேசிய மூர்த்தி சுவாமி. எனும் இந்த ஐந்து ஆண்டிகள் தான்!

தமிழகத்தில் உள்ள கோவில்கள் பெரும்பாலும் மன்னர்களாலும், பெரும் தனவந்தர்களாலும் கட்டப்பட்டிருக்கும் நிலையில், ஆண்டிகளாலே கட்டப்பட்ட திருக்கோவில் திருச்செந்தூர் முருகன் கோவிலாகும். இந்த ஐவரின் ஜீவசமாதிக ளும் திருசெந்தூர் அருகிலேயே அமைந்துள்ளது.

இவை அனைத்தையும் ஒரே நாளில் தரிசிக்கலாம். தரிசனம் செய்ய செல்லும் வழி, முதல் மூவர்களான காசி சுவாமி, மௌன சுவாமி, ஆறுமுகசுவாமி ஆகிய மூவருக்கும் ஜீவசமாதி திருச்செந்தூர் முருகன் ஆலத்தின் நேர் எதிராக கடற்கரையில் சற்று தூரத்தில் அமைந் திருக்கும் நாழிக் கிணற்றின் தெற்கே மூவர் சமாதி என்ற பெயருடன் உள்ளது.

நான்காவதாக, ஞான ஸ்ரீ வள்ளி நாயக சுவாமி அவர்களின் ஜீவசமாதி திருச்செந்தூர் கோவிலின் ராஜ கோபுரத் தின் வடக்கு வெளிப் பிரகாரத்திலுருந்து சரவண பொய்கை செல்லும் பாதையின் அருகில் வலதுபுறம் உள்ளது.

ஐந்தாவதாக, ஞான ஸ்ரீ தேசிய மூர்த்தி சுவாமி அவர்களின் ஜீவசமாதி திருச்செந்தூரிலிருந்து திருநெல்வேலி சாலையில் ஸ்ரீ வைகுண்டத்திற்கு முன்ன தாக ஆழ்வார் திருநகரி எனும் ஊரில் இறங்கி அங்கிருந்து ஆற்றைக் கடந்து ஆழ்வார்தோப்பு என்னும் ஊருக்கு செல்லவேண்டும். அந்த ஊரில் தாமிரபரணி ஆற்றங்கரையில் உள்ள காந்தீஸ்வரம் சிவன் ஆலயத்தின் பின்புறம் இவரது சமாதி இருக்கின்றது.

அடியாருக்கு அடியாரான "ஆண்டி களை" முருகன் கோவில் திருப்பணியை செய்தவர்களை தரிசிக்கும் பாக்கியம் எல்லோருக்கும் அமைவதில்லை இவர்களை தரிசனம் செய்பவர்கள் குருவுக்கும் குருவான ஞான குருவாம் முருகனின் முழு அருளை முழுமையாக பெற ஏதுவாக இருக்கும். எனவே திருச்செந்தூர் செல்பவர்கள் கட்டாயம் இந்த ஐந்து ஆண்டிகளையும் அவசியம் தரிசனம் செய்து வாருங்கள். நம் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் ஸ்ரீலஸ்ரீ மலையம்மையாரின் வாழ்க்கை வரலாறை அறிந்து கொண்டு அம்மையாரின் சீவ பீட ஆலயத்தை தரிசிப்போம் வாருங்கள்.

ஸ்ரீலஸ்ரீ மலையம்மையார்



கடல்போன்ற படைப்பில் அலை போன்றதே வாழ்க்கை! இதில் கரை காண்பதே "பிறப்பின் பயன்". கடலின் கரை காண, நாம் சித்தர்களின் சீவசமாதியை வணங்குவோம்! சித்தகளின் அருளாசியே நம்மை காத்து கரை சேர்க்கும்! சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் ஸ்ரீ மலையம்மா என்ற ரத்தினத்தம்மா அவர்களின் வாழ்க்கை வரலாறை அறிந்து கொண்டு அன்னையின் சீவ பீட ஆலயத்தை தரிசிப்போம் வாருங்கள்.

அம்மையார் அவர்களின் பூர்வீகம் திருச்சி. இயற்பெயர் இரத்தினம்மாள். பிறந்தவருடத்தைப் பற்றிய விபரங்கள் அறியமுடியவில்லை. இளம் வயதிலேயே பெற்றோர் இவருக்கு திருமணம் செய்துவைத்தனர். விதிவசத்தால் ஒரு மகன் பிறந்த உடனே கணவர் மரணமடைந்தார். மிகுந்த சிரமப்பட்டு மகனை ஆளாக்கி இராணுவத்தில் சேர்த்து விட்டார். காலப்போக்கில் பெற்ற மகனின் அன்னையை கவனிக்காமல் விட்டுவிட்டார். மகனின் அரவணைப்பு இல்லாமல் அவதிப்பட்ட அன்னை வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்டு திருச்சி மாணிக்கம் சுவாமிகள் என்பவரை

குருவாக ஏற்றுக்கொண்டு அவரிடம் வேதாந்த நெறிகளை பயின்றார்.

பிறகு அங்கிருந்து வெளியேறி பல ஆன்மீகத் தலங்களுக்கு யாத்திரை மேற்கொண்டார். தான் செல்லும் இடங்களில் எல்லாம். தான் கற்ற வேதாந்தக் கருத்துக்களை எடுத்துக் கூறி அநேக பக்தர்களை நல்வழிப்படுத்தினார்.



பல ஆன்மீகத்தலங்களை சுற்றிவந்த அன்னை இறுதியாக வேலூர் மாவட்டம் வாணியம்பாடியின் அருகே உள்ள வெள்ளுக்குட்டை கிராமத்தை அடைந்தார். அங்கு ஏற்கனவே தவம் இயற்றிவந்த தவத்திரு. தேவானந்தம்மாவுடன் தங்கி அவரிடம் மேலும் ஞானப்பாடங்களை கற்றார்.

மேலும் அவ்வூரில் வாழ்ந்து வந்த ஜோதி அம்மா என்பவர் வாழ்கையை வெறுத்துப்போன நிலையில் நமது அன்னையிடம் வந்து சேர்ந்தார். அவரையே அன்னை தன்னுடைய சீடராக ஏற்றுக்கொண்டு பல நல்ல காரியங்களை செய்து வந்தார். சில காலத்திற்குப்பின் தன் சிஷ்யை ஜோதியுடன், வேலூர் மாவட்டம், மகாதேவமலைக்கு வந்து சேர்ந்தார். அங்கு மலைக்கோவிலின் அடிவாரத்தில் இயற்கையாக அமைந்திருக்கும் சிறிய குகைகளில் தன் சிஷ்யையுடன் பத்து ஆண்டுகள் கடும் தவத்தில் ஈடுபட்டார்.

கடும் தவத்தின் பலனாக இறையருள் பெற்றார். சுற்றியுள்ள கிராமத்தில் எல்லாம் அன்னையின் புகழ் பரவத்தொடங்கியது. இரத்தினம்மாள் என்ற இயற்பெயர் கொண்ட அன்னையை ஊர் மக்கள் அன்போடு மலையம்மா என்று அழைக்கத் தொடங்கினர்.

தன்னை நாடி வந்த பக்தர்களுக்கு அன்னை அநேக அற்புதங்களை செய்து அவர்களின் குறைகளைப் போக்கியருளினார். தன்னைச் சுற்றியிருக்கும், மரம், செடி, கொடிகள், பூச்சிகள், என்று எதையும் யாரும் ஒன்றும் செய்யக்கூடாது என்று கண்டிப்புடன் கூறுவார். ஏனெனில் அவைகள் அனைத்தும் கடவுளின் சொரூபம் என்று கூறுவாராம்.

அன்னை கிடைக்கும் உணவை உட்கொண்டு எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார். அன்னையிடம் வேதாந்த பாடங்களை கேட்கும் எண்ணிக்கை பல மடங்காய் பெருகியது. அன்னை மகாதேவ மலையை விட்டு எங்கும் செல்லாமல் இருந்தார்கள். அன்பர்களின் வற்புறுத்தலுக்கிணங்க சில நேரங்களில் பக்தர்களின் வீட்டிற்குச்

சென்று தங்குவார்கள். எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்திய கருணையே வடிவான அன்னை, 1976 ஆம் ஆண்டு ஆவணி மாதம், பரணி நட்சத்திரம், அன்று சமாதி ஆனார்கள். அன்னையின் சமாதி மகாதேவமலை அடிவாரத்தில் உருவாக்கப்பட்டு அதன் மேல் லிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது.

இன்றும் தன் சீவ சமாதி ஆலயத்திற்கு வந்து வழிபடும் பக்தர்களுக்கு அவர்களின் தேவையை உடனுக்குடன் நிறைவேற்றி வைக்கிறார் "மலையம்மா சித்தர்"

<u>சீவசமாதி ஆலய முகவரி:</u>

ஸ்ரீலஸ்ரீ மலையம்மையார் சமாதி திருக்கோவில், மகாதேவமலை அடிவாரம், கே.வி. குப்பம், காட்பாடி வட்டம், வேலூர் மாவட்டம்.

<u>பேரூந்து மார்க்கம்:</u>

சென்னை - வேலூர், வேலூர் - குடியாத்தம்

<u>இறங்குமிடம்:</u>

கே. வி. குப்பம், மகாதேவமலை கூட்டுரோடு.



<u>இரயில் மார்க்கம்:</u>

சென்னை - காட்பாடி

<u>இறங்குமிடம்:</u> காட்பாடி

இங்கிருந்து பேரூந்து மூலம் கே. வி. குப்பம், மகாதேவமலைக்கு செல்லலாம்.

சித்தர்களின் சீவசமாதியை தரிசிப்போம்!

வாழ்வின் கர்மவினைகளை அழிப்போம்!

- (தொடரும்)...


நிறைவு எப்போது வரும்

உலகியல் தேவைக்காக பகவான் பாபாவை அணுகும் மனிதனால் பாபாவின் பிரபஞ்ச இறைப் பேருண்மையை உணர முடியாமல் போய்விடும் சுயநலத்தோடு பாபாவை அணுகுவது என்பது சேற்றுக் காலோடு சன்னிதானத்திற்குள் நுழைவது போல!

தனக்கு, தன் குடும்பத்திற்கு என்று பற்றோடு எதிர்பார்த்து நாம் பாபாவிடம் செல்கிற போது நம்மால் பாபாவின் அவதார நோக்கத்தையோ, பாபாவின் ஆத்ம ஞான போதனையையோ உள்வாங்கும் அளவிற்கு மனப்பக்குவம் வாய்க்காமல் போய்விடுகிறது!

மனிதனால் தர முடிந்த எதனையும் பாபாவிடம் கேட்கவே கூடாது! அப்படி கேட்பது பாபாவை சாதாரண நபர் போல நடத்துவதற்குச் சமம்! வேறு வழியே இல்லை என்றால் மட்டுமே "என்னால் முடிந்ததை செய்துவிட்டேன் சாயி! அதன் விளைவு எதுவானாலும் அது உன் சங்கல்பம் என ஏற்றுக் கொள்கிறேன் என்ற பூரண நிறைவில் நாம் வாழ வேண்டும்! அதுவே சாயி பக்தர்கள் என்பதற்கான அடையாளம்.

சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.



அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள் வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.

குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம் – ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம் – ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம் – ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம் – ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம் – ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு.பாலகிருஷ்ணன்.அண்ணாநகர் ரூ.3000.
திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.
திருமதி.சுபலட்சுமி மலையப்பன். திருநெல்வேலி. ரூ.1000.
திருமதி. திருமலைச்செல்வி. கொளத்தூர். ரூ.1000.
திரு. சதீஷ்குமார். சென்னை. ரூ.1000.
திரு. முரளி சாய்ராம். திருநின்றவூர். ரூ.1000.
திரு. கிருஷ்ணாசங்கர் சிவபிரசாத்.ரூ.501
திரு.கேஸ்வர். ஈரோடு.ரூ.500
திரு. சாய்கிருபா. வாடிப்பட்டி.ரூ.500
திருமதி. சுமதி.வாழ்க வளமுடன். கொளத்தூர். ரூ.500.

திருமதி.மகாலட்சுமி பொன்முருகன். மதுரை. ரூ.500.
திருமதி.பிரியா சுரேஷ். கேரளா.ரூ.501.
திருமதி. பஞ்சவர்ணம் செல்லம். AYK. ரூ.500.
திருமதி. பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி. விஜயா.மாங்காடு. ரூ.400.
திரு. சாய்பிரபு. வில்லிவாக்கம். ரூ.300
திரு. ரத்தினசபாபதி. ஆரணி. ரூ.300
திருமதி.லதாபாபு. வேப்பம்பட்டு. ரூ.300
திருமதி.பவித்ரா. கொளத்தூர். ரூ.250.
திருமதி.வரலட்சுமி பிரபாகரன். அயனாவரம்.ரூ.200.
திரு.கார்த்திகேயன். கதிர். ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர் டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.
திரு. விஜயன் சி.சி.பேங்க் மேலாளர். ரூ.200.
திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.
திருமதி.பிச்சையம்மாள்.
பெரம்பூர். ரூ.100.
திரு.கணேஷ் கபே.
வில்லிவாக்கம். ரூ.100
திருமதி.சாந்தி. மந்தைவெளி.ரூ.100.
திரு. ஜோசப் ஜெனி பெர்ரி. ரூ.100.
திருமதி. சாந்திமோகன். AYK. ரூ.100.
திருமதி.அபிராமி அசோக். AYK. ரூ.100
டாக்டர்.கார்த்திகா வர்ஷினி.ரூ.50
அட்சயா, சென்னை . ரூ.250
திரு.அகஸ்டின் குடும்பத்தார். திருநீர்மலை. அரிசி 25 கி.



என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* 5 வருச சந்தா - ரூ.1000 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு. கரிகாலன். கடலூர். ரூ.1000
திரு. சாய்கிருபா. வாடிப்பட்டி.ரூ.500
திருமதி.திலகம். குரோம்பேட்டை.ரூ.320
திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார். பெரம்பூர். ரூ.200.
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன்.நங்கநல்லூர். ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.



சாய் ராஜயோகாவின் தயாரிப்பு

அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்


அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

Sai maharaj Guruvaithedi -Tamil monthly - Registered with Registrar of Newspaper for India under no . TNTAM/2019/78281

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068